இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

1876 - 2026

150 ஆண்டுகள்

# பாதுகாவலன்

## PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2020. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 150 | இதழ் : 05 | திகதி : 19.04.2026 | விலை : 50.00

## அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் உடன் விவாதம் செய்வது எனது நோக்கமல்ல - திருத்தந்தை லியோ விளக்கம்!



ஆப்பிரிக்கத் திருத்தூதுப் பயணத்தின் மூன்றாம் கட்டமாக அங்கோலாவிற்குப் பயணம் மேற்கொண்ட திருத்தந்தை 14ஆம் லியோ, விமானத்தில் செய்தியாளர்களிடம் பேசுகையில் தனது பயணத்தின் நோக்கம் குறித்துத் தெளிவுபடுத்தினார். அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் உடன் விவாதம் செய்வது தனது நோக்கமல்ல என்றும், கத்தோலிக்கர்களுக்கு ஊக்கமளிக்கவே வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இங்கு கேமரூனில் தனக்கு அளிக்கப்பட்ட சிறப்பான வரவேற்பிற்கு நன்றி தெரிவித்த திருத்தந்தை, அங்கு தாம் ஆற்றிய உரைகள் அனைத்தும் சில வாரங்களுக்கு முன்பே திட்டமிடப்பட்டவை என்றார். "எனது உரைகளை அதிபருடனான விவாதமாகப் பார்க்கத் தேவையில்லை அதில் எனக்கு எவ்வித ஆர்வமும் இல்லை," என்று அவர் குறிப்பிட்டார். தனது பயணம் ஒரு மேய்ப்பரின் பணியாகும் என்று குறிப்பிட்ட அவர், அனைத்து மதத்தினரிடையே சகோதரத்துவத்தையும் அமைதியையும் வளர்ப்பதே தமது இலக்கு என்றார். ஆப்பிரிக்கக் கண்டத்தில் நிலவும் "சமமற்ற செல்வப் பகிர்வு" குறித்துக் கவலை தெரிவித்த அவர், நற்செய்தியைப் பறைசாற்றவும், நீதியைப் பேணவும் தொடர்ந்து உழைப்பதாகக் கூறினார். கேமரூன் மக்களின் உற்சாகமான வரவேற்பு மிகுந்த மகிழ்ச்சியை அளித்துள்ளதாகவும் அவர் நெகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

## ஐந்து திருத்தொண்டர்கள் புதிய குருக்களாகத் திருநிலைப்படுத்தப்பட்டனர்



யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களின் தலைமையில் கடந்த 18ஆம் திகதி நடைபெற்ற திருநிலைப்படுத்தல் திருச்சடங்குத் திருப்பலியில் யாழ். மறைமாவட்டத்தை சேர்ந்த திருத்தொண்டர்கள் யோண்சன் ஜோண் கில்ரன், ஸ்ரனிஸ்லொஸ் ஸ்ரிபன்ராஜ், யோண் பிலிப் யோண் எமில்ரன், கிளரேசியன் த்சபை திருத்தொண்டர்கள் மனுவற்பிள்ளை சுகந்தன் மற்றும் யேசுதாஸ் கிரிசாந்த் ஆகியோர் புதிய குருக்களாகத் திருநிலைப்படுத்தப்பட்டுள்ளனர்

## வடகிழக்கு ஓய்வு நிலை ஆயர்கள், மூத்த குருக்களுக்குத் திருகோணமலையில் கௌரவிப்பு



வடகிழக்கு ஆயர் பேரவையின் (North East Bishops' Council) ஏற்பாட்டில், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் நான்கு மறைமாவட்டங்களைச் சேர்ந்த மூத்த குருமார்களுக்கான விசேட ஒன்றுகூடல் நிகழ்வு திருகோணமலையில் நடைபெற்றது. இந்த நிகழ்வானது, வடக்கு மற்றும் கிழக்குத் தமிழ் மறைமாவட்டங்களின் வளர்ச்சிக்கும், ஆன்மீகப் பணிக்கும் மூத்த குருக்கள் ஆற்றிய அளப்பரிய பங்களிப்பையும், அவர்களின் நீண்டகால அர்ப்பணிப்பையும் பாராட்டி கௌரவிக்கும் ஒரு உன்னத தருணமாக அமைந்தது. யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய நான்கு மறைமாவட்டங்களைச் சேர்ந்த மறைமாவட்டத்தின் குருமுதல்வர்கள், மூத்த குருக்கள், ஓய்வு நிலை ஆயர்கள் இதில் கலந்துகொண்டனர்.

பல தசாப்தங்களாக சவால்களுக்கு மத்தியிலும் இறைப்பணியாற்றிய, ஆயர்கள், குருக்களின் சேவையை அங்கீகரிப்பதும், அவர்களுக்கு நன்றி நவில்தலும் இந்நாளின் பிரதான நோக்கமாக இருந்தது. மறைமாவட்டங்களுக்கு இடையிலான உறவை வலுப்படுத்தும் வகையிலும், அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் வகையிலும் இந்த ஒன்றுகூடல் ஒரு பாலமாக அமைந்தது. தமிழ் கத்தோலிக்க திருச்சபையின் வளர்ச்சிப் பாதையில் தடம் பதித்த ஆயர்கள், மூத்த குருக்களின் தியாகங்களை இளைய தலைமுறைக்கு எடுத்துரைக்கும் ஒரு முக்கிய நிகழ்வாக இது வரலாற்றில் இடம்பெற்றமை குறிப்பிடதக்கது.

## ஆலய அபிஷேகமும் உறுதிப்பூசுதல் திருவருட்சாதனமும்



கோப்பாய் புனித சூசையப்பர் ஆலயத்தில் யாழ் ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்ட திருப்பலியில் கோப்பாய் புனித மரியன்னை, புனித சூசையப்பர் ஆலயங்கைச் சேர்ந்த 34 சிறார்களுக்கு உறுதிப்பூசுதல் அருட்சாதனம் வழங்கப்பட்டது. இத்திருப்பலியின் போது புணர்நிர்மானம் செய்யப்பட்ட கோப்பாய் புனித சூசையப்பர் ஆலயமும் புதிய திருப்பீடமும் ஆயர் அவர்களால் அபிஷேகம் செய்யப்பட்டது. இந்நிகழ்வுகளுக்கான அனைத்து ஒழுங்குகளையும் பங்குத்தந்தை அருட்பணி ம.பத்திநாதர் அவர்கள் சிறப்புற செய்துமுடித்திருந்தார்.

## பேரருட்தந்தை இராயப்பு யோசேப் ஆண்டகை அவர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவுநாள்



மன்னார் மறைமாவட்ட முன்நாள் ஆயர் அமரர் பேரருட்தந்தை இராயப்பு யோசேப் அவர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவுநாள் நிகழ்வு கடந்த 13ஆம் திகதி நடைபெற்றது மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை தமிழ்நேசன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் அவர்களின் தலைமையில் திருப்பலியும் தொடர்ந்து நினைவுப் பேருரையும் நடைபெற்றன. நினைவுப் பேருரையை அரசியல் ஆய்வாளர் திரு. நிலாந்தன் அவர்கள் **"தமிழ் அரசியல் மீது சிவில் சமூகங்களின் தார்மீகத் தலையீடு"** என்னும் தலைப்பில் வழங்கினார். நினைவுப்பேருரை நிறைவில் மன்னார் நகரின் மத்தியில் அமைந்துள்ள ஆயர் அவர்களின் சிலைக்கு சுடரேற்றி அஞ்சலி நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. இந்நிகழ்வில் ஓய்வுநிலை ஆயர் பேரருட்தந்தை இம்மானுவேல் பெர்னான்டோ, அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், மன்னார் நகரசபை முதல்வர் திரு. வசந்தன், சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், இறை மக்களெனப் பலரும் கலந்து கொண்டனர்.

## பொன்விழாவில் அகமகிழும் இளவாலை புனித யூதாததேயு ஆலயம்



இளவாலை புனித யூதாததோயு ஆலயத் திருஅவை அதன் 50 வது அகவையில் பொன்விழாக்காண்கின்றது. இவ்வாலயத்தின் பொன்விழாத் திருப்பலியை யாழ் ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் கடந்த 19ஆம் திகதி தலைமையேற்று ஒப்புக்கொடுத்தார். இன்நன்றித் திருப்பலியில் மண்ணின் மைந்தர்களும், இளவாலை மறைக்கோட்டக் குருக்களும் இணைந்து கொண்டனர்.

அன்றைய தினம் பொன்விழாச் சிறப்பு மலரும் பொன்விழா இறுவெட்டு ஒன்றும் வெளியிடப்பட்டன. பொன் விழாவுக்கான அனைத்து செயற்பாடுகளையும் ஆலயப்பங்குத்தந்தை அருட்பணி அ.எறிக் றொஷான் அடிகளார் சிறப்புற ஒழுங்கு செய்திருந்தார்.

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)

முப்பொன் விழா

# எமது எண்ணம்

## திருத்தந்தையின் அமைதிக்கான அழைப்பு

இன்றைய உலகச் சூழ்நிலையில், உலகம் முழுவதும் அதிகரித்து வரும் பதற்றங்களின் மத்தியில், திருத்தந்தை 14வது லியோ அவர்களால் உலக சமாதானத்திற்காக விடுத்துள்ள அவசர வேண்டுகோள் மனிதகுலத்தின் மனசாட்சியை உலுக்கும் ஒரு தீர்க்கதரிசனக் குரலாக ஒலிக்கிறது. குறிப்பாக நாடுகளுக்கிடையே உருவாகிக் கொண்டிருக்கும் பதற்ற நிலைகளின் மத்தியில், ஆயுதங்களின் மொழியை விட்டு உரையாடலின் மொழிக்குத் திரும்ப வேண்டும் என்ற திருஅவையின் அழைப்பு மிகவும் அவசியமானதாக உள்ளது.

சமாதானம் என்பது வெறும் போரின்மை அல்ல. அது நீதி, மனித மரியாதை, பரிவு, உண்மை, பரஸ்பர மதிப்பு ஆகியவற்றின் இருப்பாகும். சமாதானம் முதலில் மனித இதயத்தில் பிறக்கிறது. பின்னர் அது குடும்பங்களிலும், சமூகங்களிலும், நாடுகளிலும் வளர்ச்சி பெறுகிறது.

உலகஅரசியல்தலைவர்கள்பல்வேறுபாதுகாப்புமற்றும்தேசியநலன் சார்ந்த நிலைப்பாடுகளை முன்வைக்கும் சூழலில், திருஅவையின் குரல் மனித உயிரின் புனிதத்தையும், போர்களால் ஏற்படும் அழிவுகளையும் நினைவூட்டும் ஒரு நெறிப்படுத்தும் குரலாக இருக்கிறது. அரசியல் முடிவுகள் பல சமயங்களில் அதிகாரம், பாதுகாப்பு, தற்காப்பு போன்ற கோணங்களில் அமையலாம். ஆனால் திரு அவை எப்போதும் மனித வாழ்வின் மதிப்பையும், சமரசத்தின் அவசியத்தையும் முன்னிறுத்துகிறது.

இந்த வேறுபாடு மோதலாக அல்ல. மாறாக ஒரு நினைவூட்டலாகப் பார்க்கப்பட வேண்டும். உலக நாடுகள் பாதுகாப்பைப் பற்றிப் பேசும் போது, திருஅவை மனித குலத்தின் எதிர்காலத்தைப் பற்றிப் பேசுகிறது. நாடுகள் தங்கள் எல்லைகளை பாதுகாக்க முயற்சிக்கும் போது, திருஅவை மனித இதயங்களை இணைக்க முயல்கிறது.

திருத்தந்தையின் இந்த வேண்டுகோள் எந்த ஒரு நாட்டிற்கும் எதிரான அரசியல் கருத்தாக அல்ல. அது மனித உயிரின் மதிப்பைப் பாதுகாக்கும் உலகளாவிய ஆன்மீக அழைப்பாகும். திருஅவை எப்போதும் மனித குடும்பத்தின் பக்கம் நிற்கிறது.

இந்த அழைப்பு நமக்கு, இலங்கை மக்களுக்குப், குறிப்பாக வடக்கு, கிழக்கு மக்களுக்கு மிகவும் அர்த்த முள்ளதாக இருக்கிறது. நமது கடந்த கால அனுபவங்கள் போர் என்னும் சொல்லின் வேதனையை நமக்கு நேரடியாக உணர்த்தியுள்ளன. குடும்பங்கள் பிரிந்தன. மக்கள் இடம்பெயர்ந்தனர். சமூகங்கள் காயமடைந்தன. இவ்வாறான அனுபவங்கள் சமாதானத்தின் மதிப்பை நமக்கு ஆழமாக உணர்த்துகின்றன.

சமாதானம் என்பது மிகவும் மென்மையான ஒன்றாகும். அதைப் பாதுகாக்க வேண்டும். வளர்க்க வேண்டும். தலைமுறையிலிருந்து தலைமுறைக்குக் காப்பாற்ற வேண்டும்.

எங்கள் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து கூறிய "அமைதி ஏற்படுத்துவோர் பேறு பெற்றோர் அவர்கள் இறைவனின் பிள்ளைகள் எனப்படுவார்கள்" - (மத் 5:9) என்ற வார்த்தைகள் இன்றும் நமக்கு வழிகாட்டும் ஒளியாக இருக்கின்றன. இது வெறும் அழகான வாக்கியம் அல்ல. இது ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் கொடுக்கப்பட்ட பணி அழைப்பாகும்.

நாம் ஒவ்வொருவரும் சமாதானம் செய்பவர்களாக இருக்க அழைக்கப்பட்டுள்ளோம். சமாதானம் எங்கள் குடும்பங்களில் ஆரம்பிக்க வேண்டும். எங்கள் பங்குகளில் ஆரம்பிக்க வேண்டும். எங்கள் கிராமங்களிலும் நகரங்களிலும் ஆரம்பிக்க வேண்டும். நாம் ஒருவருடன் ஒருவர் பேசும் விதத்திலும், மன்னிக்கும் மனப்பான்மையிலும், வேறுபாடுகளை மதிக்கும் அணுகுமுறையிலும் சமாதானம் வளர வேண்டும்.

உலக நாடுகளுக்கிடையே சமாதானம் வேண்டுமெனத் திருத்தந்தை அழைக்கும் போது, அவர் நம்மிடமும் பேசுகிறார். நாம் வாழும் சமூகத்திற்குள்ளும் ஏன் எமது ஆலயத் திருஅவைகளிலும் (பங்குகளிலும்) ஒற்றுமையை வளர்க்க வேண்டும் என்று அவர் நினைவூட்டுகிறார்.

வடக்குக் கிழக்கில் வாழும் கத்தோலிக்க மக்களாகிய நாம் ஒரு சிறப்பு பொறுப்பைக் கொண்டுள்ளோம். எங்கள் நிலம் துன்பத்தையும், இடம்பெயர்வையும், இழப்புகளையும் கண்டுள்ளது. அதேவேளை நம்பிக்கையையும், பொறுமையையும், மீளுருவாக்கத்தையும் கண்டுள்ளது. வன்முறை எந்தப் பிரச்சினைக்கும் நிலையான தீர்வை தராது என்பதை நமது அனுபவம் நமக்கு கற்றுக்கொடுத்துள்ளது. உரையாடலும் புரிதலும் மட்டுமே ஆழமான காயங்களை ஆற்ற முடியும்.

ஆகையால் திருஅவையின் சமாதான அழைப்பு எங்களுக்கு மிகவும் நெருக்கமானதாகும். அது தூரத்தில் இருக்கும் ஒரு கருத்தாக அல்ல. நமது நாளாந்த வாழ்க்கையோடு தொடர்புடைய ஒரு அழைப்பாகும்.

உண்மையான சமாதானத்தை உருவாக்க தைரியம் தேவைப்படுகிறது. சண்டையிடுவது எளிது. மன்னிப்பது கடினம். குற்றம் சாட்டுவது எளிது. புரிந்துகொள்வது கடினம். மிரட்டுவது எளிது. கேட்பது கடினம். ஆனால் நற்செய்தி எப்போதும் நம்மை உயர்ந்த பாதைக்கு அழைக்கிறது.

இன்றைய உலகில் ஆயுதங்களின் சத்தம் அதிகரிக்கும் போது, திருஅவையின் குரல் மனசாட்சியின் குரலாக ஒலிக்கிறது. அரசியல் பல நேரங்களில் பிரிவினையை உருவாக்கும் போது, நற்செய்தி மனித குலத்தை ஒன்றிணைக்கிறது.

சமாதானம் உலக தலைவர்களால் மட்டும் உருவாக்கப்படுவதில்லை. சாதாரண மக்களால் உருவாக்கப்படுகிறது. ஒவ்வொரு குடும்பமும் ஒற்றுமையின் இடமாக மாறும் போது, ஒவ்வொரு பங்கும் சகோதரத்துவத்தின் மையமாக மாறும் போது, ஒவ்வொரு குடிமகனும் சமரசத்தின் தூதராக மாறும் போது உலகம் மாற்றமடையும்.

ஆகையால், திருத்தந்தையின் அழைப்புக்கு நாம் செவிமடுக்க வேண்டும். உலக சமாதானத்திற்காக மன்றாடுவோமாக. உலகத் தலைவர்களுக்கு ஞானம் கிடைக்க ஜெபிப்போம். அப்பாவி மக்களின் உயிர்கள் பாதுகாக்கப்பட மன்றாடுவோமாக. அதற்கு மேலாக, நாமே சமாதானத்தின் சாட்சிகளாக மாறுவோம்.

**அருட்பணி.எஸ்.எயின்சிலி றொஷான்**

# நீதி நிலைநாட்டுவதில் அசமந்தம் தொடர்ந்தால் சர்வதேச விசாரணை கோருவதே சரியான வழி!

**உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் நினைவு நாளில் பேராயர் மல்கம்**



உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தற்கொலைத் தாக்குதல்கள் இடம்பெற்று ஏழு வருட நிறைவடைந்துள்ள நிலையில், நீதியை நிலைநாட்டும் விடயத்தில் அரசாங்கம் அசமந்தப்போக்குடன் செயற்பட்டால், சர்வதேச விசாரணையை கோருவதே சரியான வழி என கொழும்பு மறை மாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தற்கொலைத் தாக்குதல்கள் இடம்பெற்று ஏழு வருட நிறைவை முன்னிட்டு கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலத்தில் இடம்பெற்ற விசேட நினைவேந்தல் மற்றும் ஆராதனை நிகழ்வில் கொழும்பு மறை மாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய அவர், ஏழு ஆண்டுகள் கடந்தும், இந்த கொடூர தாக்குதலுக்குப் பின்னால் இருந்த உண்மையான சூத்திரதாரிகள் இன்னும் சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை என கவலை வெளியிட்டார்.

கடந்த காலங்களில் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் நீதியை நிலை நாட்டும் வாக்குறுதிகளை வழங்கிய போதிலும், அவை அரசியல் தேவைகளுக்காக விசாரணைகளை திசைதிருப்பியதாக இதன்போது அவர் குற்றம் சுமத்தினார். அவர் தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில்-தாக்குதல் தொடர்பானமுன் கூட்டிய எச்சரிக்கைகளை கவனிக்கத் தவறிய அதிகாரிகள் மற்றும் அதனை மூடிமறைத்தவர்கள் மீதான சட்ட நடவடிக்கை இன்னும் மந்த கதியிலேயே உள்ளது.

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வரும்போது வழங்கிய வாக்குறுதிகளுக்கு அமைய விசாரணைகளை முன்னெடுத்தாலும், அவை இன்னும் கீழ்மட்டத்திலேயே இருக்கின்றன. தாக்குதலில் முன்னோடியாக செயற்பட்டவர்களைக் கண்டறிய இன்னும் தீவிர நடவடிக்கைகள் தேவை. (தொடர்ச்சி 7ம் பக்)

# பாதிப்புற்ற குடும்பங்கள் இன்னும் நீதிக்காகக் காத்திருப்பது கவலை!

**ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி ஆண்ட்ரே பிரெஞ்ச்**

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தற்கொலைத் தாக்கு தல் இடம்பெற்று 7 ஆண்டுகள் கடந்தும் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் இன்னும் நீதிக்காகக் காத்திருப்பது கவலைக்குரியது என இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட பிரதிநிதி மார்க் ஆண்ட்ரே பிரெஞ்ச் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தற்கொலைத் தாக்குதலின் 07 ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நேற்று செவ்வாய்க்கிழமை கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் நடைபெற்ற விசேட நினைவேந்தல் நிகழ்வில் இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட பிரதிநிதி மார்க்-ஆண்ட்ரே பிரெஞ்ச் கலந்துக்கொண்டார்.

இந்த ஆராதனையில் கலந்துகொண்டு உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்று 07 வருடங்கள் நிறைவடைந்ததை நினைவு கூர்ந்த அவர், பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதி மற்றும் உண்மையை வெளிப்படுத்துவது குறித்து முக்கிய கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார். அதன்படி, தாக்குதல்நடந்து ஏழு வருடங்கள் கடந்துள்ளபோதிலும், பாதிக்கப்பட்ட குடும்பங்கள் இன்னும் முழுமை யான நீதியை எதிர்பார்த்து காத்திருப்பது கவலைக்குரியது என அவர் தெரிவித்துள்ளார். இந்தத் தாக்குதலின் பின்னணியில் உள்ள சூத்திரதாரிகள் யார் என்பது குறித்தும், அதற்கான உண்மையான காரணங்கள் குறித்தும் வெளிப்படையான விசாரணை நடத்தப்பட வேண்டிய தன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில் - ஏழு ஆண்டுகள் கடந்தும் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் இன்னும் நீதிக்காகக் காத்திருப்பது கவலைக்குரியது. உண்மையான குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி மற்றும் நட்டஈடு வழங்கும் பொறிமுறையில் இலங்கை அரசாங்கத்திற்குத் தேவையான தொழில்நுட்ப மற்றும் ஆலோசனைகளை வழங்க ஐக்கிய நாடுகள் சபை எப்போதும் தயாராகவுள்ளது. இலங்கையில் இந்த சம்பவம் தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கு ஐக்கிய நாடுகள் சபை தொடர்ந்தும் தனது ஒத்துழைப்பை வழங்கும்.

இந்தத் துயரமான தருணத்தில் இலங்கை மக்கள் அனைவரும் மத மற்றும் இன வேறுபாடுகளைக் கடந்து ஒற்றுமையுடன் செயல்பட வேண்டும் என்றார்.


# யாழ் ஆயர் இல்லத்தில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் நினைவுநாள் வழிபாடு



உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலின் 7ம் ஆண்டு நிறைவில் இறந்தவர்களுக்கு ஆன்ம சாந்தி வேண்டியும், தாக்குதலில் காயமுற்றோருக்கும் பாதிப்புற்றோருக்கும் நலமும் இறையாசீரும் வேண்டியும் 21ம் திகதி யாழ் ஆயர் இல்லத்தில் வழிபாடு நடைபெற்றது.

யாழ் மறை மாவட்ட குருமுதல்வர் அருட்பணி ப.யோ.ஜெபரட்ணம் அடிகளார் தலைமையில் நடைபெற்ற இவ் வழிபாட்டில் இறந்தோர் நினைவாக ஈகைச் சுடரினை யாழ் மறைக் கோட்ட முதல்வர் அருட்பணி எம்.ஜெறோ செல்வநாயகம் அடிகளார் ஏற்றிவைக்க, நினைவுதின உரையை அகவொளி இயக்குநர் அருட்பணி எம்.டேவிட் அடிகளார் நிகழ்த்தினார்.

இவ்வழிபாட்டில் குருக்கள், அருட்சகோதரிகள், இறைமக்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலர் பங்கேற்றனர்.



பெ.கிராண் ஜோசப் S.J

# உயிர்ப்பின் சாட்சிகளாய்...

> கிறித்தவ வாழ்வு என்பது வெறும் சடங்குகளின் தொகுப்பல்ல. நம் வாழ்வில் அர்த்தம் தரும் பயணமாகும். கிறிஸ்துவில் வைத்திருக்கும் நம்பிக்கை அவரின் பாடுகளில் அல்ல. உயிர்ப்பில் தான் உள்ளது. நாம் கொண்டாடிக் கொண்டிருக்கும் ஆண்டவரின் உயிர்ப்புப் பெருவிழா நம் ஆன்மீகப் பயணத்திற்கு ஒரு புதிய விடியலைத் தருகிறது.

இத்தாலியின் போலோக்னா நகரைச் சேர்ந்த ஓர் இளம் மாணவர், புனித பக்கீத்தாவிடம் ஒரு கேள்வியை எழுப்பினார். "உங்களைக் கடத்தி சித்திர வதை செய்தவர்களை மீண்டும் சந்தித்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்?" "நான் அவர்களைச் சந்தித்தால் அவர்கள் காலில் விழுந்து முத்தமிடுவேன் ஏனெனில், அவர்கள் என்னைச் சாட்டையால் அடித்ததன் விளைவாகப் பெற்ற 144 தழும்புகள் இல்லையென்றால், இன்று நான் ஒரு கிறித்தவளாகவும் இறைபணியாளராகவும் மற்றும் துறவியாகவும் இருந்திருக்க முடியாது."

இயேசுவோடு வாழ்ந்த திருத்தொண்டர்களைப் போலவும்,எண்ணற்ற புனிதர்கள் சொல்லொண்ணாத துயரத்தை ஏற்று இறைவனுக்குச் சாட்சிய வாழ்வு வாழ்ந்தனர், கிறித்தவ வாழ்வு என்பது வெறும் சடங்குகளின் தொகுப்பல்ல. நம் வாழ்வில் அர்த்தம் தரும் பயணமாகும். கிறிஸ்துவில் வைத்திருக்கும் நம்பிக்கை அவரின் பாடுகளில் அல்ல. உயிர்ப்பில் தான் உள்ளது. நாம் கொண்டாடிக் கொண்டிருக்கும் ஆண்டவரின் உயிர்ப்புப் பெருவிழா நம் ஆன்மீகப் பயணத்திற்கு ஒரு புதிய விடியலைத் தருகிறது. "அன்று வாரத்தின் முதல் நாள். அது மாலை வேளை யூதர்களுக்கு அஞ்சி சீடர்கள் தாங்கள் இருந்த இடத்தின் கதவுகளை மூடி வைத்திருந்தனர். அப்போது இயேசு அங்கு வந்து அவர்கள் நடுவில் நின்று, உங்களுக்கு அமைதி உரித்தாகுக!" என்று வாழ்த்தினார். இவ்வாறு சொல்லிய பின் அவர்தம் கைகளையும் விலாவையும் அவர்களிடம் காட்டினார். ஆண்டவரைக் கண்டதால் சீடர்கள் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டனர். இயேசு மீண்டும் அவர்களை நோக்கி, "உங்களுக்கு அமைதி உரித்தாகுக! தந்தை என்னை அனுப்பியதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன்" என்றார். இதைச் சொன்ன பின் அவர் அவர்கள் மேல் ஊதி, "தூய ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்" (யோவா 20:19-21) என்றார்.

கல்லறையின் இருளை வென்ற உயிர்த்த ஆண்டவரைச் சந்தித்த பிறகு தான் திருத்தூதர்கள் தூய ஆவியின் ஆற்றலைப் பெற்று, உலகெங்கும் நற்செய்தியை அறிவிக்கப் புறப்பட்டனர். அவர்களின் வாழ்க்கை முறையை இன்றைய சூழலில் நாம் எவ்வாறு பின்பற்றலாம்?

## 1. திருத்தூதர்களின் அடையாளம்

"திருத்தூதர்" (அப்போஸ்தல்லோஸ்) என்ற கிரேக்கச் சொல்லுக்கு "அனுப்பப்பட்டவர்கள்" என்று பொருள் திருத்தூதர்கள் இயேசுவின் போதனையை வெறும் தகவல்களாகப் பறைசாற்ற வில்லை. மாறாக, உயிர்த்த ஆண்டவரின் ஆற்றலைப் பெற்று அவரது நற்செய்தியைத் தங்களின் இரத்தச்சாட்சியால் அறிவித்தனர். உயிர்த்த ஆண்ட வரைச் சந்தித்த பின் இவர்கள் வீதிக்குச் சென்று துணிவுடன் உயிர்த்த ஆண்டவரிட மிருந்து பெற்ற அனுபவத்தைப் பற்றிப் பேசத் தொடங்கினர். இந்தத் துணிவுதான் ஒரு நற்செய்திப் பணியாளரின் முதன்மைப் பண்பாகும். "அஞ்சாதீர்கள்" என்ற ஆண்டவரின் வார்த்தையே அவர்களின் ஆன்ம பலமானது. "தூய ஆவி உங்களிடம் வரும்போது நீங்கள் கடவுளது வல்லமையைப் பெற்று எருசலேமிலும் யூதேயா, சமாரியா முழுவதிலும் உலகின் கடையெல்லை வரைக்கும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள்" (திப 1:8). இது மனித பலத்தால் அல்ல. இறைவனின் ஆற்றலால் நிகழ்ந்தது.

## 2. ஏழு திருத்தொண்டர்களின் பணிகளும் மற்றும் சாட்சிய வாழ்வும்:

**1. தூய ஸ்தேவான் :** இவரே திரு அவையின் முதல் இரத்தச்சாட்சியாவார். இறைநம்பிக்கையின் முதல் மறைசாட்சியாளர். ஏழு திருத்தொண்டர்களில் முதன்மையான ஸ்தேவான். தூய ஆவியாலும் இறைநம்பிக்கையாலும் நிறைந்தவர். பந்திகளில் உணவு பரிமாறும் "டயகோனியா" எனும் தாழ்மையான பணியைச் செய்த அதேவேளையில், இறை வல்லமையால் மக்களிடையே பெரும் அரும் அடையாளங்களையும் செய்தார். மறைநூல் அறிஞர்களும் மூப்பர்களும் அச்சுறுத்திய போது அஞ்சாமல், நற் செய்தியைத் துணிச்சலுடன் அறிவித்தார்.

**2. பிலிப்பு:** பிலிப்பு ஒரு சிறந்த நற்செய்தி அறிவிப்பாளராக விளங்கினார். சமாரியா நகருக்குச் சென்று அங்குள்ள மக்களுக்குக் கிறிஸ்துவைப் பற்றி அறிவித்ததோடு, தூய ஆவியாரின் தூண்டுதலால் எத்தியோப்பிய அரச சபையின் அதிகாரிக்குத் திரு விவிலியத்தை விளக்கி அவருக்குத் திருமுழுக்குக் கொடுத்தார். இதன்மூலம் நற்செய்திப் பணி என்பது எல்லா இனத்தவருக்கும் உரியது என்பதைத் தனது வாழ்வால் நிலைநாட்டினார்.

**3. புரக்கோரோ:** புரக்கோரோ திருத்தூதர்களால் வழங்கப்பட்ட நிர்வாகப் பணிகளை மிகவும் செம்மையாகவும் நேர்த்தியாகவும் செய்தவர். திரு அவை பாரம்பரியத்தின்படி, இவர் திருத்தூதர் யோவானின் உதவியாளராக இருந்து அவருக்குப் பணிவிடை செய்தார். பிற்காலத்தில் நிக்யேமீயா பகுதியின் ஆயராகப் பொறுப்பேற்று. அங்கிருந்த மக்களுக்கு இறைவார்த்தை அறிவித்தார்.

**4. நிக்கானோர் :** தொடக்கத் திரு அவையில் எபிரேய மற்றும் கிரேக்க மொழி பேசும் இறை நம்பிக்கையாளர்களிடையே நிலவிய பிரிவினைகளைத் தீர்ப்பதில் நிக்கானோர் முக்கிய பங்காற்றினார். உணவுப் பங்கீட்டில் கிரேக்கக் கைம்பெண்கள் புறக்கணிக்கப்படக்கூடாது என்பதில் உறுதியாக இருந்த இவர், ஏழை விதவைகளுக்குத் தேவையான உதவிகளை முன்னின்று அளித்தார். ஸ்தேவான் கொல்லப்பட்ட அதே நாளில், இவரும் கிறிஸ்துவின் மீதிருந்த பற்றுறுதிக்காகத் தனது உயிரைத் தியாகம் செய்து இரத்த சாட்சியானார்.

**5. திமேசன் :** திரு அவையில் ஒழுங்கு முறையைப் பராமதிப்பதிலும், பந்திகளில் அனைவருக்கும் சமமான உணவு கிடைப்பதை உறுதி செய்வதிலும் உழைத்துவர், பிற்காலத்தில் பெரோயா பகுதியின் ஆயராக நியமிக்கப்பட்ட இவர், அங்கு நற்செய்திப் பணிகளை விரிவுபடுத்தினார். கிறிஸ்துவின் மதிப்பீடுகளைப் பரப்பியதற்காகப் பல சித்திரவதைகளையும் துன்பங்களையும் அனுபவித்தபோதிலும், இறுதிவரை இறை நம்பிக்கையில் உறுதியாக இருந்து உயிர் துறந்தார்.

**6. பார்மனா:** திருத்தூதர்களுக்குப் பணிவிடை செய்வதிலும், நம்பிக்கையாளர்களின் அன்றாடத் தேவைகளைக் கவனிப்பதிலும் தன்னை முழுமையாக அர்ப்பணித்தவர். எளிய பணிகளின் வழியாகவும் இறைவனுக்கு மகிமை சேர்க்க மடியும் என்பதை இவர் உலகுக்குக் காட்டினார். பிலிப்பு நகரில் நற்செய்தி அறிவிப்புப் பணியில் ஈடுபட்டிருந்தபோது, இறை நம்பிக்கைக்காகத் தனது உயிரைத் தியாகம் செய்தார்.

**7. திக்கொலம். :** அந்தியோக்கியாவைச் சேர்ந்த நில்கெகா, பிற இனத்தைச் சார்த்தவராக இருந்து கிறிஸ்தவத்தைத் தழுவி, பின்னர் கிறிஸ்தவத்திற்கு மாறிய கிரேக்க மொழி பேசும் பிற இனத்தவர் களிடையே நற்செய்தியை அறிவித்தர் திரு அவையின் நிர்வாகப் பணி துல்லியமாக என்பது அனைத்துப் பின்னணி கொண்ட பாப்பின் மூலம் உறுதி செய்தார்.

## 3.நம்பிக்கைக்கொண்டோரின் வாழ்வு-முறை

"திருத்தூதர்கள் தங்களின் சிந்தனையாலும் செயலாலும் ஒன்றிணைந்த வாழ்வை வாழ்ந்தனர். இதுவே பல்வேறு சமூகக் காரணங்களால் பிரிந்து கிடக்கும் உலகிற்குக் தந்த சிறந்த எடுத்துக்கட்டாகும். சுயநலத்தைத் துறந்து தங்களுக்குள் இருந்தவற்றைத் தராளமாகப் பகிர்ந்து "கொண்டனர். "எனது" என்பது "நமது" என்று மாறிய போது, அங்கே வறுமை நீங்கி இறையாட்சி புலர்ந் தது. தனிமனித ஆதிக்கத்தைவிட பொதுநலமே மேலானது என்பதை அவர்கள் உலகிற்குக் கற்பித்தனர், திருத்தூதர்கள் எத்தகைய துன்பத்திலும் இறை வார்த்தையை விட்டுக்கொடுக்க வில்லை. சோதனைகளை வேதனைகளாகப் பார்க்காமல், இறைவனுக்கு ஆற்றும் தொண்டாகப் பார்த்தனர்.

## 4. இன்றைய சூழலில் திருத்தூதுப் பணி

திருத்தந்தை பிரான்சிஸ். "நற்செய்தி அறிவிப்பு என்பது ஒரு நுகர்வுப் பொருள் அல்ல. அது ஒரு கொண்டாட்டம்" என்று கூறுகிறார், நற்செய்தி அறிவிப்பவர் முகத்தில் மகிழ்ச்சி இருக்கவேண்டும். உயிர்த்த ஆண்டவரைச் சுமப்பவர்கள் ஒருபோதும் விரக்தியில் மூழ்க முடியாது. சோகமான முகம் நற்செய்தியின் வீரியத்தைக் குறைத்து விடும். நற்செய்தி ஒருவரைப் பயமுறுத்துவதற்கு அல்ல. மாறாக, இறைவனின் பேரன்பால் அவரை மாற்றியமைக்கவே அறிவிக்கப்படுகிறது.

மக்களின் காயங்களைக் குணப்படுத்துவது உடல் ரீதியான நோய்களைத் தாண்டி, மனக்காயங்களை ஆற்றும் மருந்தாக நற்செய்தி இருக்க வேண்டும். உலகம் அன்பிற்காக ஏங்கிக் கொண்டிருக்கிறது. அந்த ஏக்கத்தைப் பூர்த்தி செய்வதே நற்செய்திப் பணியாகும். நம் வாழ்வு மக்களை நோக்கி புறப்பட்டுச் செல்லும் திரு அவையாக மாறி, இறைவன் தரும் மகிழ்ச்சியை விதைக்கவேண்டும்.

நம் பணி தேங்கி நிற்கும் குட்டையைப் போல இல்லாமல், ஓடும் நதிபோல நற்செய்தியை எல்லா இடங்களுக்கும் கொண்டு செல்லவேண்டும். இப்படிப் பட்ட நற்செய்திப் பணியை ஆற்றிடத் திரு அவை நம்மை அழைக்கிறது.

உயிர்ப்புப் பெருவிழா நமக்கு விடுக்கும் அழைப்பு இதுவே. உயிர்த்த ஆண்டவர் நம்மீது அருள்பொழியும் ஆவியைப் பெற்று, திருத்தூதர் களைப் போல நாமும் நம் அச்சத்தைத் துறப்போம். நாம் ஒவ்வொருவரும் தனித்துவமான சமூக அடையாளங்களைப் பெற்றிருந்தாலும், கிறிஸ்துவின் அன்பில் நாம் அனைவரும் ஒன்றாக வாழ அழைக்கப் படுகிறோம். ஆண்டவருடைய ஆவி என்மேல் உள்ளது. ஏனெனில், அவர் எனக்கு அருட்பொழிவு செய்துள்ளார். ஏழைகளுக்கு நற்செய்தியை அறி விக்கவும் சிறைப்பட்டோர் விடுதலை அடைவர், பார்வையற்றோர் பார்வைபெறுவர் என முழக்கமிடவும் ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும், ஆண்டவர் அருள் தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பியுள்ளார்" (லூக் 4:16-18) என்பதற்கிணங்க, திருத்தொண்டர்கள் வழியில் பிறரன்புப் பணியிலும், மனவுறுதியோடு நற்செய்தியை அறிவிப்போம்.

எனவே, நாம் சொல்லால் மட்டும் நற்செய்தியை அறிவிப்பவர்களாக இல்லாமல், நம்முடைய அறச் செயல்களால் நற்செய்தியைப் பறைசாற்ற வேண்டும், இருள் சூழ்ந்த இந்த உலகிற்கு நாம் வெறும் விளக்குகள் அல்ல: உயிர்த்த இயேசுக்கிறிஸ்துவின் அணையாத சுடர்களாவோம். ஏனெனில், உயிர்த்த ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவே நம் ஆற்றல், அவரின் நற்செய்தியே நம் வாழ்வு!

# ஓரங்கட்டப்பட்ட பெண்கள் மீட்புச் செய்தியின் காவிகள்

***வெ***றுமையான கல்லறையின் அருகே நின்ற பெண்கள் உயிர்த்த கிறிஸ்து வின் செய்தியை (லூக். 24: 1-6) அறிவித்தார்கள். இயேசுவின் இத்தரிசனம் ஒரு புரட்சிகர அற்புதமான இறைத்திட்டம். ஓரங்கட்டப்பட்ட பெண்களுக்குத் தோன்றியது மீட்பில் பெண்களுக்கு முக்கிய வகிபாகம் உண்டு என்று உணர்த்தி நிற்கிறது. மேலும் இது உயர்மட்ட சமூக, சமய அமைப்புகளுக்குப் பெரும் சவாலாக அமைகிறது.

ஒதுக்கி வைக்கப்பட்ட சமாரியப் பெண்ணைத் தெரிந்தெடுத்து அவளுனான உரையாடல் வழியாகத்தான் மெசியா என்பதை அவளுக்கு



அருட்பணி அமிர்த யெயசேகரம்

உணர்த்தியதும், அவள் உண்மையான மெசியாவைக் கண்டேன் என்று பறை சாற்றியதும் நோக்கற்பாலது. அப்பெண் அவரிடம் “கிறிஸ்து எனப்படும் மெசியா வருவார் என எனக்குத் தெரியும். அவர் வரும்போது அனைத்தையும் எங்களுக்கு அறிவிப்பார்” என்றார். இயேசு அவரிடம் “உம்மோடு பேசும் நானே அவர்” என்றார் (யோவா.4: 25-26.

பெண்களில் சிறிய குழு ஒன்று ஜெருசலேம் மயான இருள் சூழ்ந்த வீதிகள்

**அத்துடன் கிறிஸ்துவின் உயிர்ப்பு வெற்றி பகைவர்களை முறியடிக்கும் வெற்றி நோக்கல்ல. மாறாக மானிட வரலாற்றிக்கு அன்பு, தியாகம், அமைதி போன்ற புனித இரத்தம் பாய்ச்சுவதற்கே.**

ஊடாகக் கனத்த இதயத்துடன் சோர்ந்த பாதங்களுடன் ஆனால் அவர்கள் தமது பயணத்தில் மிகத் தெளிவுடன் தமது வீழ்ந்த தலைவருக்கு இறுதி அஞ்சலிக்காக அவர்கள் விலையுயர்ந்த வாசனைத் திரவியங்களுடன் சென்றனர். இது ஓர் இறுதி முடிவன்று. ஆனால் இது மிகவும் பரபரப்பான தொடக்கம்!

ஆண்கள் சிலுவையில் அறையுண்ட இயேசுவை விட்டுவிட்டுச் செல்கிறார்கள். பெண்கள் சிலுவை அடியில் இயேசுவின் தாய் மரியாள், மகதலா மரியா நின்றார்கள் (யோவா 19: 25- மாற்.15:40). ஒரு நாள் அவர் ஒரு மெசியாவாக இருப்பார் என்றெண்ணியவர்களுக்கு மிக மோசமான நிலையில் கொலைசெய்யப்பட்டு அடக்கம் செய்யப்பட்டதை நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. ஆண்டவர் இயேசுவின் மேல் அளவு கடந்த அன்பும் பற்றுறுதியும் அவர்களைத் தூண்டியது.

இயேசுவின் சிலுவை மரணம் அவர்களின் எதிர்நோக்கைத் தகர்த்தது. அத்துடன் அவரின் நம்பிக்கையாளர்களின் கனவுகளை சிதறடித்தது. “அப்பொழுது மகதலா மரியாவும், மரியாவும் அங்கே கல்லறைக்கு எதிரே நின்றார்கள்” (12 சீடர்களுடன் 13வது சீடராகக் கணிக்கப்பட்ட) மகதலா மரியா கல்லறை வெறுமையாயிருக்கிற செய்தியை மற்றவர்களுக்கு அறிவித்தாள் (யோவா 20:11) .

ஆண்டவரின் உயிர்ப்பு ஒரு வாழும் வரலாற்றுக் கதை. மனிதர்களை நெறிப்படுத்தும் மூல விசை. இறைவனின் மீட்பின் மூலதன வளங்களின் ஊற்று.

பெண்களின் பிரசன்னத்தில் இடம்பெற்ற உயிர்ப்பு நிகழ்வு எமக்கு இறைவன் பெண்களைப் பற்றி வைத்திருக்கும் பார்வை என்ன என்பதைப் புரிய முடிகிறது.

இத்தரிசனம் ஒரு புரட்சிகர அற்புதமான இணைத்திட்டம். இத்திட்டத்தில் மீட்புச் செய்தியின் ஓரங்கட்டப்பட்ட விழிம்புநிலை சாதாரண மக்களுக்கு அறிவிக்கப்பட்டதும், அவர்கள் மூலம் பகிரப்பட்டதும் வரலாற்று உண்மை. உயிர்ப்பு நிகழ்வு, பெண்களை ஒதுக்கி வைக்கும் நிலையைம் தவிர்த்துக் கொள்ளுதல், நற்செய்திப் பரம்பலில் அவர்களையும் இணைத்துக் கொள்ளத் திருஅவை முன்னெடுப்புக் களைச் செய்யவேண்டும் என்பதில் உறுதியாகிறது.

பெண் சமத்துவம் பேணுதல், அவர்களுக்கான சலுகை அல்ல.
அது அடிப்படை மனித உரிமை.

# அல்லைப்பிட்டி இடிந்த மாதா ஆலயம்

## ஓர் வரலாற்று கண்ணோட்டம்



*(சென்ற இதழின் தொடர்ச்சி)*

குறிப்பிட்டார். இதனை நேரில்கண்ட வேறு சிலரும் உறுதிப் படுத்துகின்றனர். “போர்த்துக்கேயரால் அல்லைப்பிட்டியின் கிழக்குக் கடற்கரைக்கு அண்மையில் மணல் சூழ்ந்த பிரதேசத் தில் கி.பி 1630 ற்கும் 1650 இற்கும் இடைப்பட்ட காலத்தில் மாதா கோவில் ஒன்று அமைக்கப்பட்டது. பலகாலம் அதன் இடிபாடுகள் காணப்பட்டன. இன்று ஊர் மக்கள் அப்பிரதேசத் தைக் கையகப்படுத்தி வீடுகள் கட்டி வசிக்கின்றனர். அங்கு ஓர் நன்னீர்க் கிணறுண்டு. அது இன்றும் பாவனையில் இருக்கின்றது. பல ஏக்கர் நிலப்பரப்புக் களைக் கொண்ட மாதா கோவில் பிரதேசம் இன்று மண்ணகழ்வினால் சிதைக்கப் பட்டுள்ளது. தேவாலயத்திற்கு அண்மையில் மேமக்காலை இருந்ததற்கான அடையாளங் கள் முன்னர் இருந்தன. கோவிலுக்கு நேரே சில மீற்றர்கள் தூரத்தில் கிழக்குப் பக்கமாகக் கடற்கரை நோக்கிச்சென்ற களிமண் வீதியொன்று மண் அகழ்வின் போது கண்டுபிடிக்கப் பட்டது” என்று அல்லைப்பிட்டியைச் சேர்ந்த பண்டிதர் செ.திருநாவுக்கரசு அவர்கள் குறிப் பிடுகிறார்.

இவ்வாலயம் குறித்து பண்டிதர் செ.திருநாவுக்கரசு கூறிப்பிடும் காலப்பகுதி பற்றிய தெளிவான தரவுகளைப் பெற்று ஐயந்திரிபற உறுதிப்படுத்த இயலவில்லை. இதனால் இடிந்த மாதாகோவில் என்று அழைக்கப்படும் இவ்வாலயம் மேலே குறிப்பிட்ட ஆலயங்களில் ஒன்றின் சிதைவுகளா? அல்லது உண்மையிலேயே மரியன்னைக்காக எழுப்பட்ட பிறிதொரு ஆலயமா? என்பது ஆய்வுக்குரியது. எனினும் அல்லைப்பிட்டியிலுள்ள உத்தரிய அன்னை ஆலயம் இடிந்த மாதா கோவிலின் தொடர்ச்சியாக தற்போதுள்ள இடத்தில் அமை யப்பெற்றது என்றும் கூறப்படுகின்றது எனினும் தகுந்த வரலாற்றுச் சான்றாதாரங்களை காண்பித்து அதனை நிரூபிக்க இயலவில்லை.

இடிந்த மாதா ஆலயத்தின் சிதைவுகளுக்கு இடையில் புதையல் காணப்படுவதாகவும் பிள்ளைகளை ஆட்பலிகொடுத்து புதையல் பெறலாமென நம்பியோர் குழந்தை களைக் கடத்தியதாகவும் அறிய முடிகின்றது. தவிரவும் புதையல் தோண்டுவோரின் ஆயுதமுனைகள் இவ்வாலயத்தை சிதைத்திருக்கவும் சந்தர்ப்பமுண்டு. எனினும் 1975இல் காவலூர் கவிஞர் ஞா.ம.செல்வராசா அவர்கள் கரம்பொன் வேளாங்கண்ணி மாதா ஆலய வரலாற்று நூலுக்கு ஆக்கிய கட்டுரையொன்றில் அல்லைப்பிட்டி சூசையப்பர் ஆலயத்தின் சிதைவுகளையும் ஊர்காவற்றுறையில் புனித யுவானியார் ஆலயம் இருந்ததற்கான அடையாளங்களையும் காணலாம். ஆயினும் வேலணையில் ஆரோக் கிய மாதாகோவில் இருந்த இடம் தெரியாமல் முற்றாகவே தரை மட்டமாகிவிட்டது.என்று குறிப்பிடுகிறார்.

இதன்படி மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் இப்பகுதியில் வாழ்ந்தோர் புனித சூசையப்பருடைய ஆலயத்தையே இடிந்தமாதா கோவில் என்று அழைத்திருக்கக்கூடும் என்று ஊகிக்கலாம். எனினும் இது முடித்த முடிவு அல்ல. 2026.01.18 அன்று என்னுடைய தந்தையாருடைய உதவியுடன் இடிந்த மாதா கோவில் என அழைக்கப்படும் அமைந்திருந்த இடத்திற்கு சென்று பார்வையிட்ட போது ஏறத்தாழ ஆலயத்தின் நுழைவாயிற் பகுதி அமைந்திருந்ததாக கூறப்படும் இடத்தில் அடித்தளம் என்று நம்பத்தக்க வகையில் முருகைக்கற்கள் காணப்பட்டன. இப்பகுதிக்கு மிக அருகாமையில் குடியிருப்புகள் அமைந்திருப்பதையும் காணலாம்.

வரலாற்று நூல்களிலுள்ள குறிப்புக்களும் வாய்மொழி மூலமான கருத்துக்களும் ஒன்றையொன்று முரண்பாடான தரவுகளை தருகின்றன எனினும் ஓர் போர்த் துக்கேயர் கால ஆலயத்தின் மிகச்சொற்பமான இச்சிதைவையேனும் ஆய்ந்தறிய வும் இத்தரவை பிறரும் அறிய வாய்ப்பை ஏற்படுத்துவதுமே எனது நோக்கமாகும். இவ்விடயத்தின் மீது கரிசனை கொண்டு எதிர்கால சந்ததியாருக்கு இவ்விடயம் கடத்தப்படவும் இச்சிதைவுகள் பாதுகாக்கப்படவும் இக்கட்டுரை ஓர் வழிகோலு மாயின் அதுவே மகிழ்ச்சி.

**அ.பெ.ஜெனிஃபர்** (LL.B Honours)
**அல்லைப்பிட்டி.**

# க.பொ.த. சா/த கத்தோலிக்க திருமறை மாதிரி வினாக்களும் விடைகளும்

## வினாப்பத்திரம் -01

**பகுதி - 02**

**வினா இலக்கம் - 01**

01. மக்களால் விரும்பப்படுகின்ற இரு வரலாற்று நூல்களையும் பெயரிடுக?
02. இறைவார்த்தையின் மூலங்கள் இரண்டையும் எழுதுக?
03. புனித பவுலின் பெயரைப் பயன்படுத்தி வேறு நபர்களால் எழுதிய திருமுகங்கள் இரண்டைப் பெயரிடுக?
04. வெளிப்பாடு இலக்கியத்தில் வரும் அடையாளங்கள் இரண்டினை எழுதுக?
05. வெளிப்பாடு இலக்கியத்தின் பண்புகள் இரண்டினைப் பெயரிடுக?
06. ஐந்நூலின் வேறு இரு பெயர்களை எழுதுக?
07. ஏலோகிம் பாரம்பரியத்தில் வரும் சம்பவங்கள் இரண்டினைப் பெயரிடுக?
08. இணைத்திருமுறை நூல்களில் இரண்டினைக் குறிப்பிடுக?
09. இறைவாக்கினர்களை எபிரேய மற்றும் கிரேக்க மொழிகளில் எவ்வாறு அழைப்பர்?
10. இறைவாக்கினர்கள் இறைவாக்குரைக்கும் போது பயன்படுத்திய சொற்பதங்கள் இரண்டினைப் பெயரிடுக?

**விடைகள்**

01. ரூத், எஸ்தர்
02. திருவிவிலியம் - திரு அவையின் பாரம்பரியம்
03. 2தெசலோனிக்கேயர் - 1 திமொத்தேயு
04. அரக்கப்பாம்பு - ஆட்டுக்குட்டி
05. இருதன்மைகள் - இறுதிக்காலம்
06. தோரா - நீதிச்சட்டம்
07. ஈசாக் பலியிடப்படல் - யாக்கோபு பெத்தலில் கண்ட கனவு
08. தோபித்து - யூதித்து
09. நபி - ப்றோபேரஸ்
10. ஆண்டவர் திருவாய் மலர்ந்தருளுகின்றார் என்கிறார் ஆண்டவர்

அன்பின் மகிழ்வு

# திருச்சபைச் சட்டத்தொகுப்பின் ஒளியில் கிறிஸ்தவ திருமணம்

**உடன்படிக்கை1.1: திருமணம்: ஓர் உடன்படிக்கை, ஒப்பந்தமல்ல**

உயிர்ப்புத் திருநாளுக்குப் பிந்திய இந்த அருள்மிக்க காலத்தில், திருமண வாழ்வைப் பற்றிய ஒரு புதிய கட்டுரைத் தொடரை ஆரம்பிக்க விரும்புகிறேன். இதில், திருச்சபைச் சட்டத்தொகுப்பில் திருமண அருட்சாதனத்தைப் பற்றிக் கூறும் முக்கியமான திருஅவைச்சட்டங்களை அடிப்படையாகக் கொண்டு, திருமணத்தின் இறையியல் அர்த்தத்தையும் அதன் வாழ்வியல் அழைப்பையும் எளிமையாகவும் ஆழமாகவும் ஆராய முயல்கிறோம். திருச்சபைச் சட்டம் என்பது வெறும் சட்ட மொழி அல்ல. அதன் உட்பொருளில் வாழ்க்கையை வழிநடத்தும் இறை ஞானமும், குடும்பங்களை உருவாக்கும் மேய்ப்புப் பார்வையும் அடங்கியுள்ளன.

இந்தத் தொடரின் முதல் படியாக நாம் அணுகுவது திருச்சட்டம் 1055 ஆகும். திருமணத்தைப் பற்றிய இச்சட்டம் மிகச் செறிந்த இறையியல் பொருளை உள்ளடக்கியுள்ளது. ஆகையால் அதனை ஒரே கட்டுரையில் முழுமையாக விளக்க முடியாது. எனவே, இதனை மூன்று பகுதிகளாகப் பிரித்துச் சிந்திக்க விரும்புகிறேன். முதல் பகுதி, திருமணம் ஒரு ஒப்பந்தமல்ல, அது ஒரு உடன்படிக்கை என்பதைக் குறித்து. இரண்டாம் பகுதி, திருமணத்தின் நோக்கங்கள், அதாவது மணமக்களின் நலனும் பிள்ளைப்பேறும் பற்றியது. மூன்றாம் பகுதி, திருமணம் எவ்வாறு அருட்சாதனத்தின் உயரத்திற்கு உயர்த்தப்படுகிறது என்பதைக் குறித்ததாக இருக்கும்.

இந்த முதல் கட்டுரை, திருச்சபை ஏன் திருமணத்தை ஒரு சாதாரண ஒப்பந்தமாக அல்லாமல், ஒரு புனித உடன்படிக்கையாகப் பார்க்கிறது என்பதை மறைநூல், திருச்சபைப் போதனை, மற்றும் இன்றைய குடும்ப வாழ்வின் ஒளியில் சிந்திக்க முயல்கிறது.

**1:2 திருமணம்: ஒப்பந்தத்தைத் தாண்டிய அன்பின் உடன்படிக்கை**

ஒரு வயதான தம்பதியரை ஒருவர் கேட்டார்: "நீங்கள் அறுபது ஆண்டுகள் ஒன்றாக எப்படி வாழ்ந்தீர்கள்?" அவர்கள் சிரித்தபடி பதிலளித்தார்கள்: "நாங்கள் உடைந்ததைச் சரிசெய்யும் தலைமுறையைச் சேர்ந்தவர்கள், தூக்கி எறியும் தலைமுறை அல்ல." இந்தச் சொல் வெறும் அனுபவப் பகிர்வு அல்ல. அது கிறிஸ்தவ திருமணத்தின் உள்ளார்ந்த உண்மையை வெளிப்படுத்துகிறது. கிறிஸ்தவ பார்வையில் திருமணம் ஒரு ஒப்பந்தமாக இருந்தால், அது உடைந்தவுடன் முடிந்து விடும். ஆனால் அது ஒரு உடன்படிக்கையாக இருந்தால், உடைந்த இடத்திலேயே அது புதுப்பிக்கப்படும். இதுவே திருச்சபைச் சட்டம் 1055-ல் திருமணத்தை "உடன்படிக்கை" என்று அழைக்கும் காரணமாகும்.

திருச்சபை திருமணத்தை *foedus* எனும் லத்தீன் சொல்லால் விவரிக்கிறது. அதாவது, உடன்படிக்கை. இது ஒரு சட்டரீதியான ஒப்பந்தத்தை விட ஆழமான, வாழ்வை முழுமையாக உட்படுத்தும் உறவு. ஒப்பந்தம் என்பது பரிமாற்றத்தின் மொழி. உடன்படிக்கை என்பது அர்ப்பணிப்பின் மொழி. ஒப்பந்தம், "நீ இதைச் செய்தால் நான் உன்னோடு இருப்பேன்" என்று கூறுகிறது. ஆனால் உடன்படிக்கை, "நீ பலவீனமாயிருந்தாலும் நான் உன்னுடன் இருப்பேன்" என்று உறுதியளிக்கிறது. இதனால் திருமணம் ஒரு சட்ட உறவாக மட்டும் இல்லாமல், அருளால் தாங்கப்படும் வாழ்வாக மாறுகிறது.

புனித அகுஸ்தீன் திருமணத்தைப் பற்றிப் பேசும் போது, அது வெறும் இரு இதயங்கள் ஒன்றிணையும் பந்தம் அல்ல, மாறாகக் கடவுளின் அன்பில் நிலைத்திருக்கும் அருள் உறவு என்று வலியுறுத்துகிறார். இதுவே கிறிஸ்தவ திருமணத்தின் அழகு. அது வெளிப்படையாக ஒரு மனிதத் தீர்மானமாகத் தோன்றினாலும், அதன் ஆழத்தில் இறைவன் செயற்படுகிறார்.

உடன்படிக்கை என்பது மனிதன் உருவாக்கிய கருத்து அல்ல. அது கடவுளின் வெளிப்பாட்டின் மையக் கருத்தாகும். மறைநூலில் கடவுள் மனிதனை அணுகும் வழி உடன்படிக்கையாகும். "நான் உங்கள் கடவுளாக இருப்பேன் நீங்கள் என் மக்களாயிருப்பீர்கள்" என்ற இறைவார்த்தையில், கடவுள் தம்மை முழுமையாக மனிதனுக்குக் கொடுக்கிறார். இந்த உறவு சட்டத்தின் அடிப்படையில் மட்டுமல்ல, அன்பின் அடிப்படையில் உருவாகிறது. மனிதன் விசுவாசமின்றி நடந்த போதிலும், கடவுள் அவனை முழுமையாகக் கைவிடவில்லை. அதுவே உடன்படிக்கையின் உண்மையான தன்மையை வெளிப்படுத்துகிறது.

புனித இரேனேயுஸ், கடவுள் மனிதனை வெறும் படைப்பாக அல்ல, நண்பனாகவும், தமது வாழ்வில் பங்கு கொள்ளும் ஒருவராகவும் ஆக்க விரும்பினார் என்று வலியுறுத்துகிறார். இந்த நட்புறவு கட்டாயத்தின் பயனாக உருவாகவில்லை. அது அன்பின் வரமாகப் பிறக்கிறது. இதே உடன்படிக்கைத் தத்துவமே திருமணத்திலும் பிரதிபலிக்கிறது.

இறைவாக்கினர்கள் இந்த உடன்படிக்கையைத் திருமண உவமையின் மூலம் விளக்குகின்றனர். ஓசியா 2:19-ல் கடவுள் கூறுகிறார்: "என்றென்றைக்கும் உன்னை எனக்காக மணந்து கொள்வேன்." எசாயா 54:5-ல், "உன்னை உருவாக்



கியவரே உன் கணவர்" என்று கூறப்படுகிறது. இங்கு கடவுள் தம்மை வெறும் சட்டநிறைவேற்றுபவராக அல்ல, மணவாழ்க்கையின் அன்பிலும் நெருக்கத்திலும் தம்மை அர்ப்பணிக்கும் ஒருவராக வெளிப்படுத்துகிறார். இதுவே உடன்படிக்கையின் அழகு. அது கடமை அடிப்படையில் நிலைத்திருப்பது அல்ல, உறுதியான அன்பின் அடிப்படையில் நிலைத்திருப்பதாகும்.

புனித யோவான் கிரிசோஸ்தோம் இந்த இறை அன்பைப் பற்றிச் சிந்திக்கும்போது, அது வெளிப்புறக் கட்டுப்பாட்டின் அன்பல்ல, நெருக்கமான உறவின் அன்பு என்று காட்டுகிறார். அதாவது உடன்படிக்கை என்பது கட்டளை மட்டும் அல்ல, உள்ளத்தைப் பிணைக்கும் அருள் உறவு. இதனால் திருமணம் சட்ட வரையறைகளால் முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாத ஓர் இறையியல் உண்மையாகிறது.

புதிய ஏற்பாட்டில் இந்த உண்மை உச்சத்தை அடைகிறது. புனித பவுல் எபேசியர் 5:25-ல் எழுதுகிறார்: "கிறிஸ்து திருச்சபை மீது அன்பு செலுத்தியது போல, நீங்கள் உங்கள் மனைவியரிடம் அன்பு செலுத்துங்கள்." இங்கு திருமணம் கிறிஸ்துவின் சிலுவை அன்பின் பிரதிபலிப்பாகக் காணப்படுகிறது. கிறிஸ்துவின் அன்பு முழுமையான தன்னர்ப்பணம். அது நிபந்தனை அற்றது, தியாகம்மிக்கது, விசுவாசமானது. இதனால் திருமணம் வெறும் சமூக அமைப்பு அல்ல, மீட்பின் மறைநிகழ்வில் பங்கேற்கும் ஒரு அழைப்பாகிறது.

திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட் அவர்கள், கிறிஸ்துவின் அன்பு முழுமையான தன்னர்ப்பண அன்பு என்று வலியுறுத்துகிறார். அதுவே மனித அன்பிற்கான உண்மையான அளவுகோல். அதனால் தான், திருமணத்தில் நுழையும் இருவர், ஒருவருக்கொருவர் உணர்ச்சிபூர்வமான இணைப்பை மட்டுமல்ல, வாழ்நாள் முழுவதும் நிலைத்திருக்கும் அர்ப்பணிப்பையும் வழங்க அழைக்கப்படுகிறார்கள்.

புனித இரண்டாம் யோவான் பவுல் அவர்கள் தனது திருமண போதனைகளில், மனித அன்பு முழுமையான தன்னர்ப்பணமா மாறும் போது தான் உண்மையில் முதிர்ச்சி அடைகிறது என்று கூறுகின்றார். இந்தத் தன்னர்ப்பணம் ஒரு உணர்ச்சி நிலை அல்ல. அது ஒரு அழைப்பு, ஒரு தீர்மானம், ஒரு வாழ்நாள் பயணம். இதனால் திருமணம் ஒரு நிகழ்ச்சி மட்டும் அல்ல, தினந்தோறும் புதுப்பிக்கப்படும் உடன்படிக்கை ஆகிறது.

இன்றைய உலகம் திருமணத்தை ஒப்பந்த மனப்பான்மையாகப் பார்க்கத் தொடங்கியுள்ளது. "நான் சந்தோசமாக இருக்கிறேனா?", "எனக்கு என்ன கிடைக்கிறது?" என்ற கேள்விகள் பல உறவுகளின் மையமாக மாறியுள்ளன. இந்தப் பார்வையில் உறவு என்பது பரஸ்பர நன்மைகள் இருக்கும்வரை தொடரும் ஒன்றாகக் கருதப்படுகிறது. ஆனால் கிறிஸ்தவ பார்வையில் அன்பு என்பது பரிமாற்றத்தின் மொழி அல்ல, தன்னர்ப்பணத்தின் மொழியாகும்.

திருத்தந்தை பிரான்சிஸ் பலமுறை இன்றைய கலாசாரம் உறவுகளை நிலையற்றவையாகப் பார்க்கிறது என்று எச்சரித்துள்ளார். ஆனால் உண்மையான அன்பு பொறுமையிலும், மன்னிப்பிலும், நிலைத்திருப்பிலும் வளர்கிறது. உடன்படிக்கை மனப்பான்மை இந்தச் சூழ்நிலைக்கு எதிரான ஒரு தீர்க்கதரிசன சாட்சி ஆகிறது. அது உறவை நிபந்தனைகளால் கட்டுப்படுத்தாமல், அருளால் தாங்குகிறது.

புனித தெரேசா லிசியு கூறியபடி, அன்பு என்பது பெரிய காரியங்களில் மட்டும் அல்ல, சிறிய விசுவாசங்களில் வெளிப்படுகிறது. திருமணத்தில் இதன் அர்த்தம் மிகத் தெளிவானது. உடன்படிக்கை என்பது திருமண நாளில் கூறப்படும் பெரிய வாக்குறுதிகளில் மட்டுமல்ல, அன்றாடச் சிறிய தியாகங்களிலும் உயிர்ப்புடன் தொடர்கிறது. ஒரு மென்மையான வார்த்தை, ஒரு பொறுமை, ஒரு மன்னிப்பு, ஒரு சுமையைப் பகிர்தல், ஒரு தன்னடக்கம், ஒரு மௌனத் தியாகம், இவையெல்லாம் உடன்படிக்கையை வாழ்வாக்குகின்றன.

ஒரு கிராமத்தில் ஒரு முதிய தம்பதியிடம் ஒருவர் கேட்டார்: "உங்கள் வாழ்க்கையில் எத்தனை சண்டைகள் இருந்தன?" அவர்கள் சிரித்தபடி சொன்னார்கள்: "நாங்கள் சண்டைகளை எண்ணவில்லை ஒவ்வொரு முறையும் மன்னித்ததை நினைத்தோம்." இதுவே உடன்படிக்கையின் இதயம். அது பிழையற்ற வாழ்க்கை அல்ல, மன்னிப்பால் புதுப்பிக்கப்படும் வாழ்க்கை. கடவுள் நம்மை மீண்டும் மீண்டும் மன்னிப்பதுபோல், உடன்படிக்கையில் வாழ்பவர்கள் ஒருவரை ஒருவர் புதுப்பித்துக் கொள்ள அழைக்கப் படுகிறார்கள்.

அருட்பணி மனுவற்பிள்ளை டேவிட்
அகவொளி குடும்ப நல மையம்

இறுதியாக, திருமணம் உடன்படிக்கை ஆக இருக்கிறது என்பதன் அர்த்தம் என்ன? அது மனித அன்பு கடவுளின் அன்பின் பிரதிபலிப்பாக மாறுகிறது என்பதுதான். அது "நான் உன்னுடன் இருப்பேன்" என்ற மனித வாக்குறுதியை, "நான் உன்னுடன் இருப்பேன்" என்ற இறைவாக்குறுதியின் எதிரொலியாக மாற்றுகிறது. ஆகையால் இன்று நம் உள்ளத்தில் எழ வேண்டிய கேள்வி இதுதான்: நான் உறவுகளை ஒப்பந்தமாக நடத்துகிறேனா, அல்லது உடன்படிக்கையாக வாழ்கிறேனா?

**இந்தக் கேள்விக்கான பதில் நம் குடும்பங்களின் எதிர்காலத்தை மட்டும் அல்ல, நம் விசுவாச வாழ்க்கையின் தரத்தையும் தீர்மானிக்கும்.**

ஒரு கிராமத்தில்
முதிய தம்பதிகளிடம்
ஒருவர் கேட்டார்:
"உங்கள் வாழ்க்கையில்
எத்தனை சண்டைகள் இருந்தன?"
அவர்கள் சிரித்தபடி சொன்னார்கள்:
"நாங்கள் சண்டைகளை
எண்ணவில்லை
ஒவ்வொரு முறையும்
மன்னித்ததை நினைத்தோம்."

# க.பொ.த.சா/த கத்தோலிக்க திருமறை மாதிரி வினாக்களும் விடைகளும் (வினாப்பத்திரம் - 02)

**மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01. அடையாளங்களைப் பயன்படுத்தி எழுதப்பட்ட பழைய ஏற்பாட்டின் வெளிப்படுத்தல் நூல்
1. மக்கபேயர் 2. தொடக்கநூல் 3. தானியேல் 4. எஸ்ரா

02. திருமுழுக்கு யோவான் பாலைவனத்தில் ஆற்றிய போதனையுடன் ஆரம்பமாகும் நற்செய்தி
1. மத்தேயு 2. லூக்கா 3. யோவான் 4. மாற்கு

03. வெளிப்பாட்டு இலக்கியத்தின் பண்பு அல்லாதது பின்வருவனவற்றில்
1. இருதன்மைகள் 2. இறையியல் கருத்துக்களை முன்வைத்தல்
3. இறுதிக்காலம் 4. அடையாளங்களின் பயன்பாடு

04. பின்வரும் கூற்றுக்களில் இயேசு சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த வேளையில் நடைபெற்ற சம்பவங்களுடன் தொடர்புடையவை.
A - புளித்த திராட்சை இரசத்தைக் குடிக்கக் கொடுத்தனர்.
B - நீ மெசியாதானா என வினவினர்
C - இயேசுவை ஏளனம் செய்தனர்
D - இவன் நம் மக்கள் சீரழியக் காரணமானவன் எனப் பேசினார்கள்
1. Aயும் Bயும் 2. Aயும் Cயும் 3. Cயும் Dயும் 4. Aயும் Dயும்

05. எழுத்தாளர்களுக்குப் பாதுகாப்பை ஏற்படுத்துவதுடன் தொடர்புடைய வெளிப்பாட்டு இலக்கியத்தின் பண்பு.
1. இறுதிக்காலம் 2. புனைபெயர்களை முன்வைத்தல்
3. அடையாளங்களின் பயன்பாடு 4. இருதன்மைகள்

06. வெளிப்பாட்டு இலக்கியத்தில் குறிப்பிடப்படுகின்ற ஆட்டுக்குட்டி யாரைக் குறிக்கின்றது.
1. திருமுழுக்கு யோவான் 2. ஆபிரகாம் 3. மோசே 4. இயேசுக்கிறிஸ்து

07. சீரியப் பேரரசை 4ம் அந்தியோக்கஸ் அரசன் ஆட்சி செய்த காலப்பகுதி.
1. கி.பி.167 - 168 2. கி.மு.167 - 164 3. கி.பி.167 - 164 4. கி.மு.167 - 180

08. திருவெளிப்பாட்டு நூலின் பதில் எழுத்தாளர்
1. திருத்தூதர் பவுல் 2. திருத்தூதர் பேதுரு
3. திருத்தூதர் யோவான் 4. திருமுழுக்கு யோவான்

09. A - வெள்ளை C - கறுப்பு B - சிவப்பு D - வெளிறிய நிறம்
வெளிப்பாட்டு இலக்கியத்தில் மரணம், பஞ்சம் என்பவற்றைக் குறிப்பது
1. C,A 2. B,D 3. B,A 4. D,C

10. கி.பி. 80-96 காலப்பகுதியில் கிறிஸ்தவர்களைக் கொடிய வேதனைக்கு உள்ளாக்கிய உரோமைப் பேரரசன்
1. நீரோ மன்னன் 2. வலேரியன் 3. தொமிசியன் 4. அவுரேலியன்

11. “என் கடவுளாகிய ஆண்டவரே நீர் அடியேனை என் தந்தை தாவீதுக்குப் பதிலாக ....” இடைவெளிக்குப் பொருத்தமான சொல்.
1. தேர்ந்துகொண்டீர் 2. அரசனாக்கினீர்
3. அழைத்துக்கொண்டீர் 4. இறைவாக்கினராக்கினீர்

12. கூற்று :- மலை உச்சியில் சாலமோன் 1000 எரிபலி செலுத்தினார்
காரணம் :- கிபயோன் மலை உச்சியில் பிரதான பலிப்பீடம் அமைந்திருந்தது.
1. கூற்றுப் பிழை காரணம் சரி 2. கூற்றும் காரணமும் பிழை
3. கூற்றுச் சரி காரணம் பிழை 4. கூற்றும் காரணமும் சரி

13. ‘ஞானம் என்பது தூய ஆவியின் கொடைகளில் ஒன்று’ ஆதலால் ஞானத்தைப் பெற்றுக் கொள்ள
1. தினந்தோறும் செபிக்க வேண்டும் 2. பாடல் பாட வேண்டும்
3. ஒவ்வொருவருடனும் அன்பாக பழக வேண்டும் 4. அன்பு செய்ய வேண்டும்

14. ஞானம் என்பதற்குப் பயன்படுத்தப்படும் எபிரேயச் சொல்
1. சாலோம் 2. றதா 3. லிட்டர்ஜியா 4. ஹொக்மா

15. ஞான இலக்கியத்தில் அடங்கும் நூல்களின் எண்ணிக்கை
1. 8 2. 6 3. 9 4. 7

16. பழைய ஏற்பாட்டில் ஞானம் பற்றிய கருத்துக்கள் பல்வேறு இலக்கிய அமைப்புக்களினூடாக முன்வைக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் ஞானம் பற்றிய போதனைகளைக் கற்பனை வடிவில் வெளிப்படுத்துகின்ற நூல்.
1. நீதிமொழிகள் 2. யோபு 3. சபை உரையாளர் 4. சீராக்கின் ஞானம்

17. இயேசுவின் உயிர்ப்பிற்கு முதல் சாட்சியானவர்
1. மகதலா மரியா 2. மரியாள் 3. கபிரியேல் தூதன் 4. தோமா

18. இயேசுவின் இறந்த உடலை சிலுவையில் இருந்து இறக்கி அடக்கம் செய்ய முன்வந்தவர்
1. அரிமத்தியா ஊர் சிமியோன் 2. அரிமத்தியா ஊர் யோசேப்
3. பேதுரு 4. தோமா

19. A - பேதுரு B - யோவான் C - மத்தேயு D - தோமா
இவர்களில் பாஸ்கா ஞாயிறன்று மாலை உயிர்த்த இயேசு திருத்தூதர்களிற்குக் காட்சி கொடுத்தவேளை அவர்களோடு இல்லாதிருந்த திருத்தூதர்
1. A 2. B 3. C 4. D

20. “இயேசுவே நீர் ஆட்சியுரிமை பெற்று வரும் போது என்னையும் நினைவில் கொள்ளும்” இவ்வாறு கூறியது
1. பேதுரு 2. யூதாஸ் 3. கள்வர்களில் ஒருவர் 4. பரபாஸ்

| நற்செய்தியாளர் | | காலம் | | அடையாளம் | | இடம் | |
|---|---|---|---|---|---|---|---|
| A | மாற்கு | E | கி.பி. 64 - 66 | I | மனித முகம் | M | எபேசு |
| B | மத்தேயு | F | கி.பி. 90 - 100 | J | சிங்கம் | N | உரோமைநகர் |
| C | லூக்கா | G | கி.பி. 80 - 90 | K | கழுகு | O | பலஸ்தீனா |
| D | யோவான் | H | கி.பி. 80 - 85 | L | எருது | P | சீரியா அந்தியோக்கியா |

**21 தொடக்கம் 25 வரையான வினாக்களிற்கு அட்டவணையின் உதவியுடன் விடை தருக**

21. இயேசுவின் போதனைகள் வல்ல செயல்களைக் குறிப்பிடுவதைவிட அவருடைய இறை தன்மையினை வெளிப்படுத்தும் நற்செய்தியையும் அடையாளத்தையும் குறிக்கும் ஆங்கில எழுத்து.
1. A,J 2. C,L 3. B,I 4. D,K

22. புதிய ஏற்பாட்டில் இயேசு நமக்குச் சட்டங்களைக் கொடுத்ததாகக் காட்டுகின்ற நற்செய்தி எழுதப்பட்ட காலம்.
1. E 2. F 3. G 4. H

23. ‘இயேசு யூதர்களிற்கு மட்டுமல்ல உலகத்திற்கெல்லாம் மீட்பர்’ என்று தனது நோக்கத்தைக் கூறிய நற்செய்தியாளர்.
1. A 2. B 3. C 4. D

24. தூய பேதுருவின் மொழி பெயர்ப்பாளராக செயற்பட்டவரால் எழுதப்பட்ட நற்செய்தி, எழுதப்பட்ட இடம், எழுதப்பட்ட காலம் என்பன குறிக்கும் ஆங்கில எழுத்து.
1. N,E 2. M,F 3. O,H 4. P,G

25. இயேசுவின் தலைமுறை அட்டவணையுடன் ஆரம்பிக்கும் நற்செய்தி எழுதப்பட்ட இடம்.
1. M 2. N 3. O 4. P

26. படைப்புப் பற்றிய முதல்கதை எழுதப்பட்ட மரபு.
1. J 2. P 3. E 4. D

27. “அந்த மரம் உண்பதற்குச் சுவையானதாகவும் கண்களுக்கு ...” இடைவெளிக்குப் பொருத்தமான சொல்.
1. வடிவாகவும் 2. அழகானதாகவும் 3. களிப்பூட்டுவதாகவும் 4. மேன்மையானதாகவும்

28. இறைவன் ஆதிப்பெற்றோருக்கும், காயீனுக்கும் தண்டனை கொடுத்தது.
1. கோபத்தினால் 2. பொறாமையினால் 3. அன்பினால் 4. மேற்கூறிய யாவும் சரி

29. பின்வருவனவற்றில் ஏவாளுக்குக் கொடுக்கப்பட்ட தண்டனைகள்
A - உன் பொருட்டு நிலம் சபிக்கப்படும்
B - வேதனைகளில் நீ குழந்தைகளைப் பெறுவாய்
C - உன் கணவன் மேல் நீ வேட்கை கொள்வாய்
D - மண்ணுலகில் நீ நாடோடியாய் அலைந்து திரிவாய்
1. A,B 2. B,C 3. C,D 4. A,D

30. ஆண்டவராகிய கடவுள் மனிதனுக்கும் அவன் மனைவிக்கும் தோல் ஆடைகள் செய்து அவர்களை அணியச் செய்தார். இங்கு வெளிப்படுகின்ற இறைவனின் பண்பு
1. அன்பு, கோபம் 2. இரக்கம், அரவணைப்பு
3. அன்பு, இரக்கம் 4. உண்மை, நேசம்

31. நோவாவிடம் காணப்பட்ட நற்பண்பு அல்லாதது.
1. இறையுறவில் நிலைத்திருந்தார் 2. அவர் நீதிமான்
3. குற்றமற்றவராக இருந்தார் 4. பிறரின் குற்றங்களைப் பொறுத்துக்கொள்ளமாட்டார்

32. புதுப்படைப்பின் ஆரம்ப கர்த்தாவாக இருப்பவர்.
1. ஆபிரகாம் 2. யோசேப் 3. நோவா 4. யாக்கோபு

33. திருவிவிலியத்தில் வரலாற்றிற்கு முற்பட்ட காலம் என அழைக்கப்படும் பகுதி.
1. தொடக்க நூல் 1-11 2. தொடக்க நூல் 1-12
3. தொடக்க நூல் 12-24 4. தொடக்க நூல் 1-24

34. படைப்புப் பற்றிய 2ம் கதைக்குரிய மரபு.
1. J 2. P 3. D 4. E

35. எம்மாவு சீடர்கள் உயிர்த்த இயேசுவைக் கண்டுணர்ந்தது.
1. இயேசுவின் போதனையின் போது 2. இயேசு உயிர்த்த போது
3. அப்பத்தைப் பிட்டுக் கொடுத்த போது 4. இயேசு புதுமை செய்த போது

36. இறையன்பினதும் இயேசுக்கிறிஸ்துவின் கீழ்ப்படிதலினதும் அடையாளமாக விளங்குவது.
1. சிலுவை 2. ஆட்டுக்குட்டி 3. திருவிவிலியம் 4. தேவாலயம்

37. கி.பி. 80 - 90க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் எழுதப்பட்டது.
உரோமைப் பேரரசனால் துன்புறுத்தலுக்கு உள்ளான கிறிஸ்தவர்களிற்கு நம்பிக்கை ஊட்ட எழுதப்பட்டது. இக் கூற்றுக்களுடன் தொடர்புடைய நூல்.
1.. தானியேல் 2. திருத்தூதர்பணிகள் 3. திருவெளிப்பாடு 4. யோவான்

38. பெருவெள்ளக் கதையின் மூலம் திருவிவிலிய ஆசிரியர் எடுத்துக்காட்டும் செய்தி.
1. மனிதனை அழிப்பது
2. மனிதன் மூலம் வளர்ச்சியடைந்த பாவத்தை அகற்றிப் புதுயுகம் உருவாக்குவது
3. மனிதனைத் தண்டிப்பது
4. மனிதர்களிற்குத் துன்பத்தை விளைவிப்பது

39. ‘சபாத’ நாளின் முக்கியத்துவம் பற்றி எடுத்துக் காட்டும் மரபு.
1. குருமரபு 2. யாவே மரபு 3. ஏலோகிம் மரபு 4. இணைச்சட்ட மரபு

40. ‘வெளிப்பாடு’ என்பதைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் கிரேக்க சொல்லின் அர்த்தம்.
1. இருதன்மைகள் 2. இறுதிக்காலம்
3. மறைவான ஒன்று 4. மறைந்துள்ள ஒன்று வெளிப்படுதல்

## பகுதி - 02

### வினா இலக்கம் 01

01. இறைவன் காயீனுக்குக் கொடுத்த தண்டனைகளில் இரண்டு தருக?
02. தொடக்க நூல் 3:6 இன்படி ஏவாளின் மனதில் ஆசை பேசிய முறையை வெளிப்படுத்தும் வார்த்தைகள் இரண்டு தருக?
03. ஏனைய படைப்புக்களை விட மனிதன் மேன்மையானவன் என்பதை வெளிப்படுத்தும் பண்புகள் இரண்டு தருக?
04. இயேசுவால் அழைக்கப்பட்ட முதல் சீடர்களில் இருவரை எழுதுக?
05. பாடுகளின் நற்செய்தியையும் இறையாட்சியின் நற்செய்தியையும் எழுதுக?
06. ஞான இலக்கியங்களில் இரண்டினை எழுதுக?
07. இயேசு சிலுவையில் உயிர்விட்ட நேரத்தில் நடைபெற்ற நிகழ்வுகள் இரண்டு தருக?
08. வெளிப்பாட்டு இலக்கியத்தின் பண்புகளில் இரண்டினை எழுதுக?
09. வெளிப்பாட்டு இலக்கியத்தில் வரும் அடையாளங்கள் இரண்டினையும் அவை குறிக்கும் அர்த்தத்தையும் தருக?
10. ஞானம் பற்றிய போதனைகள் முன்வைக்கப்பட்டுள்ள இலக்கிய அமைப்புக்கள் இரண்டினை எழுதி அவற்றிற்கு உ+ம் தருக?

**விடைகள்**

| | | | |
|---|---|---|---|
| 1 - 3 | 11 - 2 | 21 - 4 | 31 - 4 |
| 2 - 4 | 12 - 4 | 22 - 3 | 32 - 3 |
| 3 - 2 | 13 - 1 | 23 - 3 | 33 - 1 |
| 4 - 1 | 14 - 4 | 24 - 1 | 34 - 1 |
| 5 - 2 | 15 - 4 | 25 - 3 | 35 - 3 |
| 6 - 4 | 16 - 3 | 26 - 2 | 36 - 1 |
| 7 - 2 | 17 - 1 | 27 - 3 | 37 - 1 |
| 8 - 3 | 18 - 2 | 28 - 3 | 38 - 2 |
| 9 - 4 | 19 - 4 | 29 - 2 | 39 - 1 |
| 10 - 3 | 20 - 3 | 30 - 3 | 40 - 4 |

01. நீ சபிக்கப்பட்டிருக்கின்றாய்.
✡ மண்ணுலகில் நீ நாடோடியாய் அலைந்து திரிவாய்.
02. இந்த மரம் உண்பதற்கு சுவையானது.
✡ கண்களுக்குக் களிப்பூட்டுவது.
✡ அறிவு பெறுவதற்கு விரும்பத்தக்கது
03. ✡ புத்தி ✡ சுயாதீனம் ✡ அழியாத ஆன்மா
04. ✡ யோவான், ✡ அவரது சகோதரர் யாக்கோபு
✡ பேதுரு ✡ அந்திரேயா
05. ✡ பாடுகளின் நற்செய்தி - மாற்கு
✡ இறையாட்சியின் நற்செய்தி - மத்தேயு
06. ✡ யோபு ✡ திருப்பாடல்கள்
✡ சபை உரையாளர்கள் ✡ நீதி மொழிகள்,
07. ✡ கதிரவன் இருண்டு நாடு முழுவதும் இருள்
✡ தேவாலயத்தின் திரைச்சீலை இரண்டாகக் கிழிதல்.
08. ✡ இருதன்மைகள் ✡ இறுதிக்காலம்.
✡ அடையாளங்களின் பயன்பாடு ✡ புனைபெயர்களை முன்வைத்தல்
09. ✡ ஆட்டுக்குட்டி - இயேசுகிறிஸ்து - ✡ அரக்கப் பாம்பு ✡ சாத்தான்
10. ✡ பழமொழிகள் - நீதிமொழிகள்
✡ கதைகள் - யோபு ✡ அறிவுரை ✡ சீராக்கின் ஞானம்
✡ கற்பனைகள் - சபை உரையாளர்

## விண்ணக வாழ்வின் முதல் மாத நினைவு

பிறப்பு
06 . 02 . 1951

இறப்பு
13 . 03 . 2026



### அமரர் சவரிமுத்து அலெக்ஸான்டர்

எம் குடும்பத்தின் ஒளிவிளக்காய் வாழ்ந்து
உம் அயராத உழைப்பால் எமை வளர்த்து
அன்புடன் எம்மையெல்லாம் ஆளாக்கி
இறைவனடி சேர்ந்து ஓய்வு பெறும் எம் அப்பா
என்றும் நாம் நினைப்போம் உம்மை
இறைவனிடம் பிரார்த்திப்போம்
நீரும் எமக்காய் இறைவனிடம் வேண்டிடுவீர்.

போயிட்டி
இளவாலை

என்றும் உங்கள் நினைவுகளோடு
குடும்பத்தினர், உறவினர்

## அகவை நூறில் ஐயாவுக்கு ஆனந்தக் கவிதை

மண்ணகத்தில்
14 . 04 . 1926

விண்ணகத்தில்
03 . 01 . 1983



### அமரர் ம.சூசைப்பிள்ளை (ஆசிரியர் - சமாதான நீதிவான்)

இளவாலை மேற்கில் உதித்து
இளைய சந்ததி நாம்
இவ்வுலகில் உயர்வாய் நின்று
இன்புற இனிய வழிகள் பல காட்டினீர்

உம் சந்ததி மட்டும் அல்ல
உம் ஊரே உயர்வடைய வேண்டும் என்று
கல்விக்கோர் அடித்தளத்தை
கண்ணியமாய் இட்டுவைத்தீர் - அதனால்
ஊரிலே நீர் வளர்த்த மாணவர் பலர்

பீடாதிபதிகள் என்றும் விரிவுரையாளரென்றும்
வைத்தியரென்றும் - கல்விப் பணிப்பாளர்

ஆசான்களென்றும் - ஆசிரிய ஆலோசகரென்றும்
குருக்களென்றும் உயர் பதவிகளில்
மிளிருகின்றோம்

நீர் கண்ட கனவுகள் பல இன்று நனவாகி
உவகையுடன் வீறுநடை போடும் சமுகத்தை
விண்ணில் இருந்து கண்டு மகிழ்வீரோ - நீர்
ஆண்டவர் சந்நிதியில் அமைதியுடன் துயில்கொள்ள
ஆண்டவர் நிச்சயம் அருள்புரிவாரென -
நம்புகின்றோம் ஐயா

நீங்கா நினைவுகளில்
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

## மகளிருக்கு முதல் மரியாதை (யோவான் 20: 1-18)

மகதல மரியா இயேசுவின் பொதுப்பணிகளின் போது ஒன்றாக ஏனைய பெண்களுடன் இணைந்து செயற்பட்டதில் சிறப்பானவள். நற்செய்திகளில் நாம் கண்ட மகதலா மரியா தொடக்க காலத்தில் நோய்களால் துன்பங்களுக்கு உள்ளாக்கப்பட்டிருந்தவள். இறைமகன் இயேசுவின் அருட்கொடைகளினால் அனைத்து நோய்களும் குணமடைந்து ஆரோக்கியமாக வாழ்ந்து வந்தாள்.

தான் பெற்றுக்கொண்ட அருட்கொடைகளுக்காக நன்றி மறவால் எந்த நேரத்திலும் மாறாத அன்பு கொண்டு இயேசுவின் திருவடிகளில் தன்னையே அர்ப்பணித்த பெண். இயேசுவின் திருப்பணிகளின்போது பேரார்வம் கொண்டு அவருக்குப் பணிவிடைகள் புரிந்து வந்தாள். இயேசுவுக்கும் சீடர்களுக்கும் பக்கபலமாக இருந்து, தூய மகளிர் குழுவின் ஒப்பற்ற தலைவி - இறுதியில் இயேசுவுக்கு நேர்ந்த அவலச்சாவின் போது பேரதிர்ச்சியுறவள். இயேசுக் கிறிஸ்து சிலுவையில் சிந்திய இரத்தத்தோடு தனது கண்ணீரையும் கலந்து கல்வாரியைப் புனிதப்படுத்தியவள்.

இயேசு மரணித்த வேளை வாசனைப் பொருட்களை அவசர கோலத்தில் அள்ளித் தெளித்து அவரது புனிதமான உடலை அடக்கம் செய்ததை நினைத்து அழுவதற்குக்கூட நேரம் கிடைக்காத போனது பற்றி ஆற்றாமை கொண்டவள். ஆண்டவரை இழந்த மாளாத துயரத்தில் கடந்த இரண்டு நாட்களில் துயில்கொள்ள மறந்தவள். அடுத்தநாள் சனிக்கிழமை மாலையில் பரிமளத் தைலத்தைப் பரிவோடு சேகரித்து மறுநாள் கதிரவனின் தோற்றத்திற்காகக் காத்திருந்தவள்.

## அகவொளி குடும்ப நலமையம் திருமண சேவை



### மணமகள் தேவை

வயது - 33
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை- A/L
தொழில் ::- ASTRA SALES RAP
பிரதேச செயலகம் :- சாவகச்சேரி

வயது - 35
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை- O/L
தொழில் :- கடற்தொழில்
பிரதேச செயலகம் :- யாழ்ப்பாணம்

வயது - 43
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை :- O/L
தொழில் :- எலட்ரிக் மெக்கானிக்
பிரதேச செயலகம் :-வேலணை

### மணமகன் தேவை

வயது - 29
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - BSC
தொழில் :- English Teacher
பிரதேச செயலகம் :- கரவெட்டி

வயது - 25
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - O/L
தொழில் :- NEFAD
பிரதேச செயலகம் :- யாழ்ப்பாணம்

வயது - 40
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - CSC, MPhill
தொழில் :- D.O
பிரதேச செயலகம் :- சண்டிலிப்பாய்

இவை பற்றிய மேலதிக விபரங்களைப் பெற கீழ் உள்ள முகவரியில் தொடர்பு கொள்ளவும்
அகவொளி குடும்ப நல மையம் புனித பத்திரிசியார் வீதி யாழ்ப்பாணம்
தொலைபேசி இலக்கங்கள்
077 - 904 7651, 021- 222 2856, 077- 942 2970.

# மதத்தை அரசியலாக்குபவர்களுக்கு ஐயோ கேடு

## பாமெண்டாவில் திருத்தந்தை எச்சரிக்கை!

கமரூன் நாட்டின் வடமேற்குப் பகுதியில் உள்ள ஆங்கிலம் பேசும் நகரமான பாமெண்டாவிற்குத் திருத்தந்தை லியோ நேற்று வருகை புரிந்தார். அங்கு நடைபெற்ற 'அமைதி சந்திப்பில்' உரையாற்றிய அவர், அரசியல் மற்றும் இராணுவ ஆதாயங்களுக்காக மதத்தைப் பயன்படுத்துபவர்களுக்குக் கடும் எச்சரிக்கை விடுத்தார்.

தொடர்ந்து பத்து ஆண்டுகளாக உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்டுள்ள இப்பகுதி மக்களின் துயரங்களைக் கேட்டறிந்த திருத்தந்தை, "அழிப்பதற்கு ஒரு நிமிடம் போதும், ஆனால் கட்டியெழுப்ப ஒரு வாழ்நாளே போதாது என்பதை "யுத்தப் பிரபுக்கள்" உணர மறுக்கின்றனர்" என்று சாடினார்.

ஆயுதங்களுக்காகப் பில்லியன் கணக்கான டொலர்களைச் செலவிடும் நாடுகள், மக்களின் காயங்களைக் குணப்படுத்தவும் கல்விக்கும் நிதி ஒதுக்க மறுப்பதைக் கண்டு அவர் வேதனை தெரிவித்தார்.

மதத் தலைவர்கள் இணைந்து அமைதி இயக்கத்தைத் தொடங்கியுள்ளதைப் பாராட்டிய அவர், "மதத்தை இருளுக்குள் தள்ளும் சுயநலவாதிகளுக்கு மத்தியில், நீதிக்காக ஏங்கும் நீங்கள் மலைமேல் ஒளிரும் விளக்காகத் திகழ்கிறீர்கள்" என்றார்.

ஆபிரிக்க வளங்களைச் சுரண்டி அதையே ஆயுதங்களாக மாற்றி விநியோகிக்கும் முறையை நிராகரிக்கவேண்டும் என்று கோரிய அவர், அண்டை வீட்டாரைச் சகோதரராக ஏற்கும் போதுதான் உண்மையான அமைதி பிறக்கும் என்று தெரிவித்தார்.

### நீதி நிலைநாட்டுவதில்....

(2ம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கைகளில் இன்னும் பகிரங்கப்படுத்தப்படாத பகுதிகள் மற்றும் இரகசிய ஆவணங்கள் குறித்து அரசாங்கம் வெளிப்படைத்தன்மை யுடன் செயற்படவேண்டும்.


விசாரணைகளுக்கு இடையூறாக இருக்கும் அல்லது கடந்த காலங்களில் தகவல்களை மறைத்த பாதுகாப்பு மற்றும் புலனாய்வுத்துறை அதிகாரிகள் இன்னும் உயர் பதவிகளில் நீடிப்பது விசாரணைகளின் சுயாதீனத்தன்மையை கேள்விக்குறியாக்குகிறது.

நீதியை நிலைநாட்டும் விடயத்தில் அரசாங் கம் அசமந்த போக்குடன் செயற்பட்டால், சர்வதேச விசாரணையை கோருவதேசரியானவழி. இந்தாக்குதலில்உயிரிழந்தவர்களின் ஆத்மா சாந்திக்காகவும், காயமடைந்தவர்களுக்கும் திருச்சபை என்றும் துணை நிற்கும் - என்றார்.

## விண்ணக வாழ்வின் 1ம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு
31 . 12 . 1946

உதிர்வு
24 . 04 . 2025



அமரர்
### சூசைப்பிள்ளை மதுரநாயகம்

"பயப்படாதே
உன்னை மீட்டுக் கொண்டேன்
உன்னை பேர் சொல்லி அழைத்தேன்"
(எசாயா 1:43)

மலர்வு
15 . 11 . 1948

உதிர்வு
20 . 03 . 2025



அமரர்
### மேரி பிலோமினா மதுரநாயகம்

(மலர்)

"உனக்கு நான் முடிவில்லாத
அன்பு காட்டியுள்ளேன். எனவே
பேரன்பால் உன்னை ஈர்த்துள்ளேன்"
(எரேமியா 31:3)

என்றென்றும் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

## உடுகம பங்கு மக்கள் யாழ். ஆயரைச் சந்தித்தனர்



காலி மறைமாவட்டம் உடுகம பங்கு மக்கள் இணைந்து முன்னெடுத்த திருயாத்திரையும் களஅனுபவப் பயணமும் கடந்த 11,12,13ஆம் திகதிகளில் நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை லசந்த சஞ்சீவ பொன்சேகா அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பங்குமக்கள் மன்னார் மற்றும் யாழ்ப்பாண மறை மாவட்டங்களைத் தரிசித்து அங்குள்ள பிரசித்தி பெற்ற ஆலயங்களையும் இடங்களையும் பார்வையிட்டதுடன் யாழ். மறை மாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களையும் யாழ். மறைமாவட்ட ஆயர் இல்லத்தில் சந்தித்தனர். இவ்யாத்திரையில் 150 வரையானவர்கள் பங்குபற்றியிருந்தனர்.

## டொன்பொஸ்கோ மாணவர்களின் சிறப்பு நிகழ்வு



கிளிநொச்சி பல்லவராயன்கட்டு டொன்பொஸ்கோ ஆங்கிலப் பாடசாலை மாணவர்களின் சிறப்பு நிகழ்வு கடந்த 11ஆம் திகதி நடைபெற்றது. பாடசாலை அதிபர் அருட்தந்தை மெல்வின் றோய் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மாணவர்களால் தவக்கால உண்டியல் மூலம் சேகரிக்கப்பட்ட பணத்தைக் கொண்டு முழங்காவில் ஆதார வைத்தியசாலைச் சிறுவர் நோயாளர் பிரிவுக்குத் தேவையான இலத்திரனியல் வெப்பமானி, நிறை அளக்கும் உபகரணம், மற்றும் உணவுப்பொருட்களும் வன்னேரி முதியோர் இல்ல முதியோருக்கு அத்தியாவசியப் பொருட்களும் வழங்கிவைக்கப்பட்டன.

## முன்பள்ளிச் சிறார்களின் சந்தை



யாழ். திருக்குடும்பக் கன்னியர் மட முன்பள்ளிச் சிறார்களின் விற்றல் வாங்கல் திறனை மேம்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்பட்ட சந்தை நிகழ்வு கடந்த 09ஆம் திகதி நடைபெற்றது. முன்பள்ளி அதிபர் அருட்சகோதரி ரீனா டயஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சிறார்களால் கைவினைப் பொருட்கள், மரக்கறி வகைகள், பழவகைகள், குளிர்பானம், உணவுப்பொருட்கள், அழகுசாதனப் பொருட்கள், கற்றல் உபகரணங்கள் என்பன காட்சிப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்பட்டன.

இந்நிகழ்வில் யாழ். புனித அடைக்கல அன்னை ஆலயப் பங்குத்தந்தை அருட்தந்தை ஆனந்தகுமார் அவர்கள் பிரதம விருந்தினராகவும் யாழ். மாகாண திருக்குடும்பக் கன்னியர் சபை ஆலோசகர் அருட்சகோதரி மெற்றில்டா வசந்தி மற்றும் யாழ். திருக்குடும்பக் கன்னியர் மட தலைவி லுமினா போல்ராஜ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடத் தேசிய பாடசாலை அதிபர் அருட்சகோதரி மரியசீலி மரியதாஸ், அருட்சகோதரிகள், ஆசிரியர்கள், அயல் முன்பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர்களெனப் பலரும் பங்குபற்றியிருந்தனர்

## இறை இரக்கப் பெருவிழா



தர்மபுரம் பங்கின் பிரமந்தனாறு இறை இரக்க ஆண்டவர் திருத்தல வருடாந்தத் திருவிழா பங்குத்தந்தை அருட்தந்தை றேமன்ட் றெனால்ட் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 12ஆம் திகதி நடைபெற்றது. 08ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆயத்தநாள் வழிபாடுகள் ஆரம்பமாகி 11ஆம் திகதி நற்கருணைவிழா இடம்பெற்றது. திருவிழா த்திருப்பலியை யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களும் நற்கருணைவிழாத் திருப்பலியை முல்லைத்தீவு மறைக்கோட்ட முதல்வர் அருட்தந்தை இராஜசிங்கம் அவர்களும் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தனர். இறை இரக்கப் பக்தியை முன்னெடுத்து இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது கொட்டில் ஆலயமான பிரமந்தனாறு இறை இரக்க ஆண்டவர் ஆலயம் வன்னியில் நடைபெற்ற இனப்படுகொலைப்போரின்போது பல்லாயிரக்கணக்கான மக்கள் தஞ்சமடைந்து இறைவனின் இரக்கத்தை அனுபவித்த ஓர் வரலாற்று சிறப்புமிக்க ஆலயமாக அமைந்திருப்பதுடன் இவ்வாலயத் திருநாளில் யாழ். மறைமாவட்டத்தின் பல இடங்களிலிருந்தும் ஆயிரக் கணக்கான மக்கள் வருகைதந்து வழிபாடுகளில் பக்தியுடன் பங்குகொள்வதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## இளவாலை ஆலயப் பொன்விழாவினை முன்னிட்டுக் கண்காட்சி



இளவாலை புனித யூதாததேயு ஆலயப் பொன்விழாவை முன்னிட்டு யூபிலி கலைக் குழுவினால் முன்னெடுக்கப்பட்ட கண்காட்சி கடந்த 11,12,13ஆம் திகதிகளில் ஆலய மண்டபத்தில் நடை பெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை எரிக் றொசான் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இக்கண்காட்சியில் ஆலயத்தின் 50 வருடப் படிமுறை வளர்ச்சி, சிறப்பு நிகழ்வுகள் போன்றவற்றின் புகைப்படங்கள், பங்குத்தந்தையர்கள் விபரங்கள் போன்றவை காட்சிப்படுத்தப்பட்டன. கண்காட்சியை அமல மரித்தியாகிகள் சபை அருட்தந்தை டணிஸ்ரன் அவர்கள் ஆரம்பித்துவைத்தார். யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம், அருட்சகோதரிகள், இறை மக்களெனப் பலரும் கலந்து கண்காட்சியை பார்வையிட்டனர்.

## திருவுளச் சபை ஒன்றுகூடல்



திருவுளச் சபை அங்கதத்வர்களுக்கான உயிர்ப்புப்பெருவிழா ஒன்றுகூடல் கடந்த 13ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. சபை ஆலோசகர் குழுவின் ஒழுங்குபடுத்தலில் சபையின் இலங்கை மாகாண முதல்வர் அருட்தந்தை கொட்வின் கமிலஸ் - சணா அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின் ஆரம்பத்தில் கொடியேற்றப்பட்டுத் தொடர்ந்து கருத்துரை, அங்க த்தவர்கள் அறிமுகம், குழுக் கலந்துரையாடல், திருப்பலி என்பன இடம்பெற்றன. இந்நிகழ்வில் இலங்கையில் பணியாற்றும் சபைக் குருக்கள், மணத்துறவு ஆண்கள், யாழ்ப்பாண, கொழும்பு மற்றும் மன்னார் வட்டாரக் குடும்பத்தினரென 80 பேர் பங்குபற்றினர்.

## அன்பிய ஆணைக்குழுக் கூட்டம்



யாழ். மறைமாவட்ட அன்பிய ஆணைக்குழுக் கூட்டம் கடந்த 14ஆம் திகதி அகவொளி குடும்பநல நிலையத்தில் நடைபெற்றது. ஆணைக்குழு இயக்குநர் கிளரீசியன் சபை அருட்தந்தை றொனால்ட் சுஜீவன் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் வருகின்ற வைகாசி மாதம் 31ஆம் திகதி யாழ் மறைமாவட்டத்தில் கடைப்பிடிக்கப்படவுள்ள மறை மாவட்ட அன்பிய ஞாயிறு தொடர்பாகவும் மறைமாவட்ட மறைக்கோட்ட மற்றும் பங்கு ரீதியாக எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள செயற்பாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

## கிறிஸ்து உயிர்ப்பு விழாச் சிறப்பு நிகழ்வு



யாழ். புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் கிறிஸ்து உயிர்ப்பு விழாச் சிறப்பு நிகழ்வு கடந்த 12ஆம் திகதி நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை ஆனந்தகுமார் அவர்களின் வழிநடத்தலில் மறையாசிரியர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் இலவச மருத்துவப் பரிசோதனை, பங்குமக்களுக்கான விளையாட்டுக்கள், உணவுப்பொருள் விற்பனை என்பன இடம்பெற்றன. இந்நிகழ்வில் பங்குமக்கள் ஆர்வத்துடன் பங்குபற்றினர்.

## "அருளானந்தம்" மண்டப திறப்புவிழா



சில்லாலை புனித யாகப்பர் ஆலய வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுவந்த "அருளானந்தம்" மண்டபத் திறப்புவிழா கடந்த 10ஆம் திகதி நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை லியோ ஆம்ஸ்றோங்க் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்கள் கலந்து திருப்பலியைத் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்து மண்டபத்தை ஆசீர்வதித்து திறந்துவைத்தார். இந்நிகழ்வில் இளவாலை மறைக்கோட்ட முதல்வர் அருட்தந்தை யேசுதாஸ் மற்றும் பங்குமக்கள் கலந்துகொண்டனர். ஆலயத்தின் முதலாவது குருவாகிய அருட்தந்தை அருளானந்தம் அவர்களின் குருத்துவ 40ஆவது ஆண்டு நிறைவாக அமைக்கப்பட்ட இம்மண்டபத்தின் கட்டுமானப் பணிகளுக்கான நிதியனுசரணையை அருட்தந்தை அருளானந்தம் மற்றும் அவரது சகோதரி திருமதி எலிஸ்ரன் மலர் ஆகியோர் வழங்கியிருந்தனர்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2026ம் ஆண்டு சித்திரை மாதம் 19ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.